1-9-57

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



26 SEP 1957
MADRAS

3

# செய்திகள்

## வளரும் எழுத்தாளர்கள்

சென்னையிலுள்ள வளரும் எழுத்தாளர் சங்க அங்கத்தினர்கள் தங்கள் முகவரியை, வெ. அனந்தன், 5, நாகேசுவர ஐயர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-6 என்ற விலாசத்துக்கு எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## பரீட்சை முறையில் மாறுதல்

இப்பொழுதுள்ள பரீட்சை முறைகளில் பெரிய மாறுதல்கள் செய்ய வேண்டுமெனப் பல ராஜ்யங்களைச் சேர்ந்த கல்வி அமைச்சர்கள் முன்வந்திருக்கிறார்கள் விரைவில் இதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவர்கள் செய்யப் போகிறார்களாம்.

## 'ப்ளூ' ஜுரம் மேற்கே பரவுகிறது

ஜப்பானில் தோன்றி, இந்தியாவில் தன் கைவரிசையைக் காட்டிவிட்டு, இப்பொழுது ஐரோப்பாவுக்குப் பரவியிருக்கிறது இந்த 'ப்ளூ' விஷ ஜுரம்.

## ஹெலிகாப்டர் ஜெட்

ஹெலிகாப்டர் விமானம் விபத்துக்குள்ளான விமானங்களையும் பிரயாணிகளையும் தேட உதவுகிறது. அதை எந்தக் கா[illegible] மேடுகளிலும் தெருக்களிலும் இறங்கச் செய்யலாம். பறந்தவாறே அது [illegible] அந்தரத்தில் நிற்கும். விமானத்தின் அளவே இருக்கும். அதன் விசிறி[illegible]கள் மேல் புறத்தில் இருக்கும். இப்பொழுது ஒரு விமான எஞ்சினியர் மி[illegible]கச் சிறிய ஜெட் ஹெலிகாப்டர் விமானம் ஒன்றைத் தயாரித்திருக்கிறா[illegible]. ஒரு மோட்டார் காருக்கு ஆகும் செலவைவிட அதற்கு அதிகம் [illegible] செலவு ஆகாதாம். அமெரிக்க ராணுவம் இந்த ஜெட் ஹெலிகாப்டர் விமா[illegible]த்தில் அக்கறை காட்டுகிறதாம்.

## செயற்கை உயிர்

செயற்கை முறையில் உயிரைச் சிருஷ்டிக்க முடியும் என்று ஒரு சோவியத் விஞ்ஞானி கூறுகிறார். சமீபத்தில் சர்வ தேச மகாநாடு ஒன்று கூடவிருப்பதால் அப்போது இதுபற்றி ஆராய்ச்சி செய்யச் சில நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்களாம்.

## கலைஞர்களுக்குப் பாராட்டு

சுதந்தர தின விழாவை முன்னிட்டுச் சென்னை சர்க்கார் இய[illegible], இசை, நாடகம் ஆகிய மூன்று துறையில் பிரசித்தி பெற்ற கலைஞர்கள் மூவரையும் பாராட்டிப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தது. இலக்கியத்துக்கு டாக்டர் மு. வரதராசனாரும், இசைக்குத் திருமதி கே. பி. சுந்தராம்பாள் அவர்களும், நாடகத்துக்கு ப. சம்பந்த முதலியார் அவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

## ஜான்ஸி ராணி தபால் தலை




சுதந்தரப் போரின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக, சுதந்தர தினத்தன்று இந்திய சர்க்கார் இரண்டு புதிய தபால் தலைகள் வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் ஜான்ஸி ராணி லக்ஷ்மி பாய் அவர்களின் படம் கொண்ட தபால் தலையும் ஒன்று.

# கண்ணன்

## பொருளடக்கம்

**மலர்: 8** **இதழ்: 17**

**1 - 9 - '57**


| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| துப்பறியும் மோகன் | .. | 3 |
| இரவில் நடந்தது | .. | 9 |
| பக்கத்துக்குப் பத்து | .. | 14 |
| பூங்கொத்து | .. | 16 |
| என் அண்ணி | .. | 17 |
| பேராசை | .. | 20 |
| ராட்டினக் குதிரை | .. | 21 |
| நீங்களும் நானும் | .. | 22 |
| கடற் புலி | .. | 25 |
| ஹம் பஞ்சி ஏக் டால்கே | .. | 27 |
| எழுத்தாளராக வேண்டுமா? | .. | 28 |

அட்டைப்படம்: போட்டோ - புஷ்பத்துறை சுப்பிரமணியம்

செய்திகள் - 2-ஆம் அட்டை

பேனா நண்பர்கள் - 3-ஆம் அட்டை



வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25


கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## அபிநயம்!



# குழந்தைகளே!

இந்த இதழிலேயே சித்திரப் போட்டியின் முடிவை அறிவிக்கலாம் என்று ஆன மட்டும் பார்த்தேன். ஆயிரத்துக்கும் மேற்பட்ட படங்கள் வந்திருப்பதால் பரிசிலனை இன்னும் முடியவில்லை. அடுத்த இதழில் இந்த முடிவை அறிவிக்க முடியும் என்று நம்புகிறேன்.

தொடர்கதைப் போட்டிக்கு இதுவரையில் கதைகள் அதிகமாக வரவில்லை. பலர் முடிவுத் தேதியை இன்னும் கொஞ்சம் ஒத்திப்போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதன்படியே சரியாக ஒரு மாதம் தள்ளிப் போட்டிருக்கிறோம். இந்த அறிவிப்பைச் சென்ற இதழிலேயே நீங்கள் கண்டிருக்கலாம். இந்த இதழிலும் காணலாம்.

சென்ற இதழில் வெளியான, ''சிறந்த பேச்சாளனாக வேண்டுமா!'' என்ற கட்டுரையைப் பாராட்டிப் பல மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் எழுதியிருக்கிறார்கள். அதே போன்ற கட்டுரைகள் மேலும் பல வெளியிட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அத்தகைய கட்டுரைகளை மேலும் வெளியிட முயல்வேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் ஆசிரியர் என்ற தலைப்பில் ஒரு புதிய பகுதியைத் தொடங்கி, சில இதழ்களில் வெளியிடலாம் என்று எண்ணியிருக்கிறோம். பன்னிரண்டு வயதுக்குமேல் பதினறு வயதுக்குட்பட்ட மாணவர்கள் தங்கள் தங்கள் ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதி யனுப்பலாம். உங்கள் ஆசிரியரிடம் நீங்கள் காணும் தனிச் சிறப்புகள், பெருமைகள், அருங்குணங்கள் முதலியன உங்கள் கட்டுரைக்கு விஷயமாக இருக்க வேண்டும். ஆசிரியர்களைப் பழித்தலோ, கேலி செய்து புண்படுத்துதலோ அந்தக் கட்டுரைகளில் இருக்கலாது. அதே வயதுக்குட்பட்ட மாணவிகள் எங்கள் ஆசிரியை என்ற தலைப்பில் எழுதி யனுப்பலாம். அஞ்சல் உறையின்மீது, 'எங்கள் ஆசிரியர்' பகுதி என்று குறிப்பிட வேண்டுகிறேன்.

இந்த ஆண்டுத் தீபாவளி மலர் மிக மிகப் புதுமையோடு விளங்கும். மலரில் குழந்தை எழுத்தாளர்களுக்கு அதிகப் பக்கங்கள் ஒதுக்கப்படும். வழக்கத்தைவிட இந்த ஆண்டு ஒரு படி மேல் என்று உங்கள் பாராட்டை ஒருமுகமாகப் பெற்றுவிடும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம். குழந்தை எழுத்தாளர்கள், வளரும் எழுத்தாளர்கள் எல்லாருடைய முகவரியும் எனக்குக் கிடைக்கவில்லை யாகையால் எல்லாருக்கும் நேரிட எழுத முடியவில்லை. அவர்கள் தங்கள் சமீபத்திய புகைப் படத்தையும் எழுதியுள்ள கதைகள் பெயரையும் பிறந்த தேதியையும் குறிப்பிட்டு எனக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன். முன்தாகக் கிடைத்தால் இதை உசிதம்போல் பயன்படுத்திக்கொள்ள வசதியாக இருக்கும்.

இந்த இதழில் பரிசுத் தொடர்கதையான துப்பறியும் மோகன் முடிவுறுகிறது. இதைப் பாராட்டி எழுதிய எண்ணற்ற கண்ணன் நேயர்களுக்கு எழுதியவர் சார்பாகவும் கண்ணன் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய தொடர்கதை என்ன என்று கேட்டுத் தினமும் பல கடிதங்கள் வருகின்றன. இதுபற்றி அடுத்த இதழில் தெரிவிக்க எண்ணுகிறேன்.

—ஆசிரியர்.

11809



# துப்பறியும் மோகன்

தே. பார்த்தசாரதி

"என்ன, நான் சொன்னது காதில் விழுந்ததோ இல்லையோ? சாவியை எடுத்து அறைக் கதவுகளையெல்லாம் திற. உம். நேரமாகிறது'' என்றான் சிவசாமி.

''முடியாது'' என்று காளிமுத்து பதில் அளித்தான். அவன் குரலில் எப்படி அவ்வளவு தைரியம் தொனித்ததோ!

சிவசாமியின் வலது கால் 'சடா' ரென்று மேலே எழும்பியது. அதே வேகத்தில் காளிமுத்துவின் வயிற்றில் ஓர் உதை விழுந்தது. 'அம்மாடி' என்று கத்திக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டான் காளி. உடனே ஒரு கான்ஸ்டபிள் ஓடிப் போய் அவனை நன்றாகப் பரிசோதனை செய்து அவனிடமிருந்த சாவிகளை எடுத்தான். வேகமாய்ப் போய் ஒவ்வோர் அறைக்கதவையும் திறந்து உள்ளே பார்த்தான். செவிடனைப் பிணைத்திருந்த கயிற்றை அவிழ்த்தான். லீலாவுக்கும் விடுதலை அளித்தான். பின்னர் லீலாவும் செவிடனும் பின்தொடர, சிவசாமி முதலியோர் நின்றிருந்த இடத்துக்கு வந்தான் அந்தக் கான்ஸ்டபிள்.

மற்றச் சம்பவங்கள் வெகு துரிதமாக நிறைவேறின. காளிமுத்துவும் சோமுவும் விலங்கிடப்பட்டனர். பின்னர் அனைவரும் வாயிலில் இருந்த ஜீப்பை நோக்கிச் சென்றனர். ஜீப்பில்—

மோகன் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் லீலா, ''மோகன்'' என்று கூவிக்கொண்டே ஓடினாள். காளிமுத்து பல்லை 'நறநற'வென்று கடித்தான். ஜீப் பழையபடி காட்டை நோக்கிப் புறப்பட்டது.

குறிப்பிட்ட இடம் வந்ததும் ஜீப் நின்றது. எல்லோரும் இறங்கி உள்ளே சென்றனர். அங்கே ஓர் ஆளைப் பிடித்துக்கொண்டு அனைவரும் நின்றிருந்தனர். சாரங்கபாணி வியப்பினால் திணறிக்கொண்டிருந்தார்.

நடுவே தலைகுனிந்து நின்றிருந்த உருவம் யாரோ வரும் சப்தத்தைக் கேட்டதும் தலை நிமிர்ந்து பார்த்தது. காளிமுத்துவின் கண்களும் அதன் கண்களும் சந்தித்தன. உடனே இருவருக்கும் 'ஷாக்' அடித்தாற்போல் உடல் குலுங்கியது.

''என்ன, சந்தோஷ சாமியாரின் முகத்தில் சந்தோஷத்தையே காணோமே!'' என்றான் சிவசாமி.

ஆம்; அது சந்தோஷ சாமியார்தான்! அவர்தான் திருடர்களுக்கு உடந்தையாகக் கல்லைப் புரட்டியவர்! அவரிடம் சாரங்கபாணி பெரு மதிப்பு வைத்திருந்தாராதலால், அவரை அந்நிலையில் கண்டதும் அப்படியே அலறிவிட்டார்.

அப்போது இதுவரையில் மௌனமாக எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த திவான் பகதூர் தினகரத்தினம், ''மிஸ்

டர் சிவசாமி! எங்களுடைய சொத்தை யெல்லாம் எங்களிடம் திருப்பிக் கொடுத்து விடலாமே!'' என்றார்.

''அவ்வளவு அவசரப்படாதீர்கள். உங்கள் நகைகளும் பணமும் இந்தக் குழிக்குள்ளேதான் இருக்கின்றன. இப்போது உடனே அவற்றை எடுத்துவிட முடியாது. எங்கள் மேலதிகாரிகளுக்கு முன்னிலையில்தான் எல்லாம் பரிசோதனை செய்து பார்த்து நடந்தாக வேண்டும். ஆனால் ஒன்று நிச்சயம். உங்கள் பொருள் உங்கள் கைக்கு இன்னும் ஒரு வாரத்துக்குள் வந்து சேர்ந்துவிடும்.... நீங்களும், மிஸ்டர் சுந்தரமும் இந்தச் சிறுவனுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறீர்கள்!'' என்று மோகனைக் காட்டிக் கூறினான் சிவசாமி. இருவரும் மகிழ்ச்சியுடன் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

சாரங்கபாணி நெற்றிப் பொட்டை அமுக்கி, ''விஷயங்கள் புரியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது!'' என்றார்.

''எனக்குக் குழப்பம் இல்லை. உமக்கு முதலிலிருந்து எல்லாவற்றையும் நான் விளக்குகிறேன். இங்கேயே எல்லாவற்றையும் சொல்ல ஆரம்பித்தால், உமக்குக் குழப்பம் அதிகமாகிவிடும்; தலையை வலிக்கும்; அப்புறம் 'காபி, காபி' என்று கத்தினால் இங்கே ஒன்றும் கிடைக்காது.... ஆகவே, மிஸ்டர் சாரங்கபாணி, நாம் எல்லோரும் இப்போது போலீஸ் ஸ்டேஷனுக்கே போவோம். போனதும் நாம் செய்ய வேண்டிய சில வேலைகள் இருக்கின்றன. முதலில் இதோ, இந்தப் பெண் லீலா—இவளுடைய தகப்பனாருக்கு ஒரு தந்தி கொடும். அவர் வந்து சேர்வதற்குள் நான் உமக்கு எல்லாவற்றையும் சொல்கிறேன்'' என்றான் சிவசாமி.

சாரங்கபாணி, மோகன், சிவசாமி, செவிடன், லீலா ஆகியோர் போலீஸ் ஜீப்பில் ஏறிக்கொண்டனர். காளிமுத்து, சோமு, சந்தோஷ சாமியார் ஆகியோர் பலத்த போலீஸ் பந்தோபஸ்துடன் போலீஸ் லாரியில் ஸ்டேஷனுக்குச் சென்றனர். நகை, பணம் ஆகியவை போட்டு மூடப்பட்டிருந்த குழியைப் பாதுகாக்க இரண்டு போலீஸ்காரர்கள் காவல் போடப்பட்டனர்.

போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றதும் சாரங்கபாணி, சிவசாமி சொன்னபடியே லீலாவின் தகப்பனாருக்கு உடனே புறப்பட்டு வரும்படிப் போலீஸ் தோரணையில் ஒரு தந்தி அடித்தார். பிறகு, சிவசாமி சொல்லும் விவரங்களைக் கேட்கத் தயாரானார்.

## 14. பிரிந்தவர் கூடினர்

சிவசாமி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''மிஸ்டர் சாரங்கபாணி, இரண்டு நாட்களுக்கு முன்னால் சந்தோஷ சாமியாரைப் பார்க்க நாம் இருவரும் போனோமே, நினைவிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''ஆகா! நன்றாக நினைவிருக்கிறது. நான்கூட அவரை ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுக் கொண்டு வந்தேன். நீ நடுவில் திடீரென்று 'உங்கள் கூட்டாளிகள் சௌக்கியமா, சுவாமிகளே?' என்று கேட்டாய். அப்போது அவருக்கு-ஏன், எனக்கும்கூடத்தான்-தூக்கி வாரிப்போட்டது. ஏன் அப்படிக் கேட்டாய்?''

''நீங்கள் அவருடன் பேசிக் கொண்டிருக்கையில் நான் உங்கள் சம்பாஷணையைக் கவனிக்காமல் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டிருந்தேன். நான்தான் வேண்டாததை யெல்லாம் கவனிப்பவன் என்று உங்களுக்குத் தெரியுமே! அப்படி நான் கவனித்துக்கொண்டிருந்தபோது, திடீரென்று சாமியாரின் அருகில் ஒரு வெள்ளைக் காகிதம் கிடந்தது தெரிந்தது. அவர் கவனிக்காதபோது மெள்ள நான் அதை எடுத்து என் கால் சட்டையில் பத்திரப்படுத்திக் கொண்டேன். நீங்கள் இருவரும் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தபோது அதை எடுத்து ஓரக் கண்ணால் அவசரமாகப் படித்து விட்டேன்.''

''அது என்ன கடிதம்?'' என்ருர் சாரங்கபாணி ஆவலுடன்.

''இதோ சொல்கிறேன். அந்தக் கடிதம் ரத்னம் என்பவனுக்குக் காளிமுத்து எழுதிய கடிதமாக இருந்தது. அந்தக் கடிதம் அங்கே வர ஒரு வழிதான் உண்டு என்று எனக்குப் பட்டது. அது சாமியாரின் இடுப்பிலிருந்து அங்கே விழுந்திருக்க வேண்டும். ஆகவே, இந்தச் சாமியார் உண்மைச் சாமியாரலல; ரத்னம் என்ற பெயருடைய ஆளாகத்தான் இருக்க வேண்டும், இவனுக்கும் காளிமுத்துவுக்கும் ஏதோ தொடர்பு உண்டு, வெளியாரை ஏமாற்றத்தான் இப்படி வேஷம் போடுகிருன் என்று தீர்மானித்தேன். அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள எண்ணித்தான் வெறுமனே 'உங்கள் கூட்டாளிகள் சௌக்கியமா?' என்று கேட்டேன். அவன் உண்மையிலேயே சாமியாராக இருந்திருந்தால் 'கூட்டாளிகளா? யாரது?' என்று ஒன்றும் புரியாமல் கேட்டிருக்க வேண்டும் அல்லவா! ஆனல் அப்படிச் செய்யாமல் என் கேள்வியைக் கேட்டதும் திடீரென்று தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு விழிப்பானேன்? ஆகவே, சந்தேகத்துக்கிடமின்றி இவன் ரத்னம் என்று எனக்குப் பட்டது.

''பிறகு போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும், ஒரு கான்ஸ்டபிளை அழைத்து, சாமியாருக்குத் தெரியாமல் மறைந்திருந்து அவருடைய நடவடிக்கைகளைக் கவனித்து என்னிடம் சொல்லும்படி அனுப்பினேன். அவனும் அப்படியே ரத்னத்தைப் பின்தொடர்ந்து கவனித்து, தான் அறிந்த விவரங்களை என்னிடம் சொன்னன். ரத்னம், காளிமுத்துவின் ஏஜண்ட் என்றும், இருவரும் அடிக்கடி மறைவிடங்களில் சந்தித்துப் பேசுவதாகவும், காளிமுத்து தான் கொள்ளையடித்ததை யெல்லாம் அந்தக் காட்டில் எங்கோ வைப்பதாகவும் அவற்றைப் பாதுகாப்பதற்காக ரத்னத்தை வைத்துக்கொண் டிருப்பதாகவும், அவர்கள் அடிக்கடி ரகசிய பாஷையில் பேசிக் கொள்வதாகவும் சொன்னன்'' என்று கூறி, சிவசாமி சிறிது நிறுத்தினன்.

''அப்படியானல், அந்த விவரங்களைக் கேட்டதுமே நீ அவர்களை 'அரெஸ்ட்' செய்திருக்கலாமே?'' என்று சாரங்கபாணி கேட்டார்.

சிவசாமி, ''நீங்களானல் அப்படிச் செய்திருப்பீர்கள். ஆனல், நானதலால் அப்படி அவசரப்பட்டு ஏதும் செய்யாமல் இருந்தேன். அப்போது சுலபமாக அவர்களைப் பிடித்திருக்க முடியும். ஆனல், அவர்களை எவ்வளவுதான் அடித்து உதைத்தாலும் இடிந்த பங்களாவின் சரித்திரமே நமக்குத் தெரியாமல் போயிருந்திருக்கும். அவர்கள் காட்டில் எங்கே நகைகளைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிருேம் என்பதையும் சொல்ல மாட்டார்கள். அதனல்தான் இவர்களை இனி விடாமல் கவனித்து இவர்களையும், இவர்களோடு சம்பந்தப்பட்டவர் இன்னும் யாராவது இருந்தால் அவர்களையும், எல்லோரையும் கையும் களவுமாகப் பிடிக்க வேண்டும் என்று காத்திருந்தேன். நான் எதிர் பார்த்தது கடைசியில் வீண் போகவில்லை.

''அதனல்தான் மறுநாள் மோகன் பொருட் காட்சிக்குப் போவதாகச் சொன்னபோது 'வழியிலே நீ ஏதாவது திருடனையே கூடக் கண்டுபிடிப்பாய்' என்று சொன்னேன். அப்படியேதான் நடந்தது!

''மோகன் வந்து சொன்ன விவரங்களைக் கேட்ட பிறகுதான் உங்களுக்கும், மிஸ்டர் தினகரத்னம், சுந்தரம் ஆகியோருக்கும் போன் செய்து வரவழைத்தேன். பிறகு, காட்டில் நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே!'' என்று முடித்தான் சிவசாமி.

''ஆமாம், காட்டில் எதற்காகக் கல்லை வேறு இடத்திற்குத் தள்ளச் சொன்னய்?'' என்று சாரங்கபாணி கேட்டார்.

''அந்தக் கல்லை வேறு இடத்தில் தள்ளி வைத்தால், காளிமுத்து அங்கு வர நேர்ந்தால், அந்த இடத்தில்தான் நகைகளைப் புதைத்ததாக எண்ணிக் குழி தோண்டிப் பார்த்து ஏமாந்து போவான். நாம் கல்லை

நகர்த்தி வைத்தது அவனுக்குத் தெரியாது என்று நினைத்துத்தான் அவ்வாறு செய்யச் சொன்னேன். ஆனால் அப்போது நான் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. நம்முடைய ஜீப் பாதையில் நிற்பதைப் பார்த்துவிட்ட ரத்னம் உடனே செடி கொடிகளுக்கிடையே மறைந்திருந்து நாம் கல்லை நகர்த்தி வைப்பதைக் கவனித்துவிட்டான். இலைகள் அசையும் சப்தம் கேட்டு நான் திரும்பிப் பார்த்தபோது 'சடா' ரென்று ஓடிவிட்டான். அப்படி ஓடும்போது காவிவேஷ்டி காற்றில் பறப்பதைப் பார்த்தேன். உடனே வந்தது அவன்தான் என்று அறிந்து கொண்டேன். நாமெல்லோரும் இந்த இடத்தை விட்டுப் போனதும், கல்லைப் பழையபடிப் பெயர்த்து முன்பிருந்த இடத்திலேயே வைக்கலாம் என்ற எண்ணத்துடன் அவன் வருவான் என்று ஊகித்தேன்.

''அதே போல, நானும் மோகனும் மற்றக் கான்ஸ்டபிள்களும் ஜீப்பில் ஏறிப் போவதைக் கவனித்த ரத்னம் முக்காடிட்டுக் கொண்டு அந்தக் கல்லைப் பழைய இடத்துக்குத் தள்ள வந்தான். இப்படி நடக்கும் என்று எதிர் பார்த்துத்தானே நான் உங்களை மறைந்திருந்து யார் வந்தாலும் பிடித்துக் கொள்ளும்படிச் சொன்னேன்? நீங்களும் அதன்படியே செய்தீர்கள். அந்த முக்காட்டை விலக்கி உள்ளே சாமியார் இருப்பதைப் பார்த்ததும் உங்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்குமே! இல்லையா, மிஸ்டர் சாரங்கபாணி?'' என்று சிவசாமி கேட்டான்.

''ஆமாம், அப்பா. ஆனால், இந்தத் திருட்டுப்பயலையா போய் 'சாமியார் சாமியார்' என்று துதித்தேன் என்று இப்போது நினைத்தாலும் அவமானமாக இருக்கிறது'' என்றார் சாரங்கபாணி.

''அப்படி ஒரேயடியாக அவமானப்பட்டுவிடாதீர்கள். ஏனென்றால், அங்கிருந்த பலரிடம் நான் விசாரித்தபோது எனக்கு ஓர் உண்மை வெளிப்பட்டது. அதாவது, உண்மையிலேயே 'சந்தோஷ சாமியார்' என்று ஒருவர் உண்டாம். ஆனால், அவர் ஒரு வாரத்துக்கு முன்னால்தான் திடீரென்று நினைத்துக்கொண்டு வேறு ஏதோ ஒரு காட்டுக்குப்போய்விட்டாராம். இதையறிந்து ரத்னம் தந்திரமாக அவரைப் போலவே மாறுவேடம் போட்டுக்கொண்டு இந்தக் காட்டிலேயே தங்கியிருக்கிறான். அப்போது யாரும் சந்தேகிக்க முடியாதல்லவா?'' என்றான் சிவசாமி.

''அடேயப்பா, எனக்குத் தெரியாமலே நீயும் மோகனும் எவ்வளவு காரியங்களைச் செய்துவிட்டீர்கள்!'' என்று ஆச்சரியப்பட்டார் சாரங்கபாணி.

அப்போது அந்த அறைக்குள் ஒரு புதிய மனிதர் பரபரப்புடன் நுழைந்தார். அவரைக் கண்டதுமே லீலா உணர்ச்சி வசப்பட்டு, ''அப்பா!'' என்று கத்திக் கொண்டு, அவர் கால்களைக் கட்டிக் கொண்டாள். அவள் தந்தை உணர்ச்சி மிகுதியினால் ஒன்றும் பேச முடியாமல் அவள் முதுகைத் தடவிக் கொடுத்தார். அவர் கண்களில்கூடக் கண்ணீர் துளித்தது. சில நிமிஷங்கள் கழித்து, ''லீலா! கண்ணு, என்னை விட்டு விட்டுப் போய்விட்டாயே!..ஐயோ, எந்தத் திருட்டுப் பாவி உன்னைத் தூக்கிக் கொண்டு போனான்? நல்லவேளை! உன்னையும் திரும்பிக் காண்பேனா என்று ஏங்கிக்கொண் டிருந்தேனே! என் வயிற்றில் பால்வார்த்தாயே!'' என்று சொல்லிவிட்டுச் சிறு குழந்தைபோல விம்மினார். இந்தக் காட்சி எப்பேர்ப்பட்ட கல் நெஞ்சனின் கண்களிலிருந்தும் ஒரு துளிக் கண்ணீரை வரவழைத்துவிடக் கூடியதாக இருந்தது.

''அப்பா, இது யார் தெரிகிறதா அப்பா?'' என்று லீலா, மோகனைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள். அவள் தந்தை மோகனின் அருகில் வந்து அவனை உற்றுப் பார்த்தார். பிறகு, தம் சட்டைப்பையிலிருந்து மூக்குக் கண்ணாடிப்பெட்டி ஒன்றை எடுத்து, அதிலிருந்து மூக்குக் கண்ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டு மீண்டும் மோகனைப் பார்த்தார். பிறகு, ''அடடே, ''நீயா? நீ மோகன் இல்லை



யாடா?..எதிர் வீட்டுப் பையன் இல்லையாடா? உன் அப்பாவும் அம்மாவும் உன்னைக் காணமல் தவித்துத் தண்ணீராக உருகிக் கொண்டிருக்கிறர்களடா! இப்போது உன்னைப் பார்த்தால் உன் அப்பா சந்தோஷத்தின் சிகரத்தை அடைந்து விடுவாரேடா'' என்ருர்.

சிவசாமியும் சாரங்கபாணியும் மோகனைப் பார்த்தனர். பழைய நினைவுகள் மீண்டும் வந்ததனல் மோகனின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளி கன்னத்தின் வழியே வழிந்தோடியது. உடனே சிவசாமி லீலாவின் தந்தையைப் பார்த்து, ''சார், நீங்கள் நம்ம போலீஸ் லாரியிலேயே போய் இவனுடைய பெற்ருேர்களை உடனே அழைத்து வாருங்கள்'' என்ருன். அவரும் அப்படியே தலையசைத்துவிட்டு அகன்ருர்.

சில மணி நேரத்தில் மோகனின் பெற்ருேரும் வந்து சேர்ந்தனர். தம் மகனை மீண்டும் கண்டதில் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என்பது கற்பனையுள்ள ஒவ்வொரு மனிதனும் தன் மனக்கண்ணில் கண்டு அனுபவிக்க வேண்டிய விஷயம்.

''நான் கோபத்தில் அப்படி அடித்ததற்காக நீ இப்படி ஓடி வந்து விடலாமா?..நீ எப்படி வந்தாய்?'' என்று அவன் தந்தை கேட்டார்.

''அதெல்லாம் பெரிய கதை அப்பா! அப்புறம் சொல்கிறேன். இதோ, இவர்கள் இருவரும்தான் எனக்குப் பெரிய உதவி செய்திருக்கிருர்கள். இவர்கள் இல்லையானல் நீங்கள் என்னை இப்போது இந்த இடத்தில் பார்த்துக்கொண்டிருக்க முடியாது'' என்று கூறி, சிவசாமியையும், செவிடனக நடித்துத் தன்னை இடிந்த பங்களாவிலிருந்து காப்பாற்றியவனையும் சுட்டிக் காட்டினன் மோகன்.

அந்தச் செவிடனையே சற்று நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த மோகனின் அம்மா திடீரென்று, ''இதோ பார்த்தீர்களா, இவன் காலை! இவன் நம்முடைய சுகுமாரேதான்!..ஆ!'' என்ருள்.

மோகன் வியப்புடன், ''என்ன, இவன என் அண்ணன் சுகுமார்?'' என்று கேட்டான்.

''ஆமாம், இதோ பார்! சிறு வயதில் இவன் சைக்கிள் விடுவதில் மிகவும் ஆசை கொண்டவன். ஒரு சமயம் சைக்கிளிலிருந்து கீழே விழுந்து விட்டான். அப்போது இவனுடைய இடதுகால் கட்டை விரலின்மீது அடுத்த விரல் ஏறி விட்டது. அந்த அடையாளம் மறையாமல் இன்னும் இருக்கிறது.. இவன்தான் என் சுகுமார். நான் இழந்த பிள்ளைகள் இருவரையும் இன்று இங்கே காண்கிறேன்'' என்று மோகனின் அம்மா—சுகுமாரனின் அம்மா—மகிழ்ச்சியுடன் கூறினாள்.

மோகனின் தந்தை, சிவசாமிக்கு விஷயங்களை விவரமாகக் கூறினார். அதைக் கேட்ட சாரங்கபாணி, ''நீங்கள் சொல்வதை நிரூபிக்க உங்களிடம் வேறு ஓர் அத்தாட்சியும் இல்லை. ஆனால், நீங்கள் கூறுவதை மறுக்க எங்களிடமும் எவ்விதத் தடயமும் இல்லை. ஆகவே, இவர் இஷ்டப்பட்டால் நீங்கள் அழைத்துக்கொண்டு போகலாம்; ஆட்சேபம் இல்லை'' என்றார்.

''இப்போதே போவதற்கில்லை. இந்தக் கேஸ் சம்பந்தமாக இவருடைய சாட்சியம் தேவைப்படும். பின்னர் நீங்கள் அழைத்துக் கொண்டு போகலாம்'' என்றார் சாரங்கபாணி.

சிவசாமி சிரித்தபடி, ''வீட்டில் இருந்தாலும் வெளியில் இருந்தாலும் அண்ணன், தம்பிகளுக்குள் எப்போதும் ஒற்றுமை இருக்காது போலிருக்கிறது! அண்ணன் திருடர்களுக்கிடையே வளர்ந்தான்; தம்பி ஒரு சி. ஐ. டி.யிடம் வந்து சேர்ந்தான்'' என்றான்.

அனைவரும் சிரித்தார்கள்.

சிவசாமி மீண்டும், ''மோகன் பரீட்சையில் பெயிலானால் போகிறது; அதனால் ஒன்றும் குடி முழுகிப்போய்விடாது. அவனுக்கு இயற்கையாகவே தைரியமும் பொது அறிவும் இருக்கிறது. அதனால்தான், அவனால் இவ்வளவு விவரங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. ஆகவே, அவன் படிப்பு முடிந்ததும் இவனை நம்முடைய இலாகாவிலேயே சேர்த்து விடலாம். இவனுடைய முதல் கேஸே இவ்வளவு பிரமாதமாக அமைந்துவிட்டதனால், மோகனுக்கு மேலும் மேலும் வெற்றிகள் கட்டாயம் கிட்டும்'' என்று சொல்லி விட்டு, மோகனின் தந்தையிடம், ''என்ன சார், உங்களுக்குச் சம்மதந்தானே?'' என்று கேட்டான்.

''இதற்கு என்னைக் கேட்க வேண்டுமா, என்ன? நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ, அப்படியே!'' என்றார் மோகனின் தந்தை.

## இதர சில விஷயங்கள்

கடைசியாகச் சில விஷயங்களைச் சொல்லி இந்தக் கதையை முடித்துக் கொள்கிறேன்.

இப்போது மோகன் மிகவும் பிரபல துப்பறியும் நிபுணனாகிவிட்டான். அவன் பெயர் எல்லாப் பத்திரிகைகளிலும் அடிபடுகிறது. 'கோலிக் குண்டு' என்ற சிறுவர் பத்திரிகையின் ஆசிரியர் ஒவ்வொரு தீபாவளி மலரிலும், மோகனிடமிருந்து கதைகள் எழுதி வாங்கி வெளியிடுகிறாராம். 'மயிலாப்பூர் ஜிலேபி சிறுவர் சங்கம்', 'ராயப்பேட்டை அல்வாப் பிரியர் கழகம்' முதலான பல சங்கங்களிலும் அடிக்கடி வந்து பேசும்படி அவனுக்கு அழைப்பிதழ் வருகிறதாம்.

லீலா எப்பொழுதும் தன் தந்தையிடம் மோகனின் தைரியத்தைப் பற்றியே சொல்லிச் சொல்லிப் பெருமைப்படுகிறாளாம்.

சாரங்கபாணி முன்பு தினத்துக்கு மூன்று வேளை காபி குடித்துக் கொண்டிருந்தவர், இப்போது நான்கு வேளைதான் குடிக்கிறாராம்.

காளிமுத்துவும் சோமுவும் சிறையில் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்களாம்.

சிவசாமியும் சாரங்கபாணியும் பொழுது போகாத போதெல்லாம் ஸி. ஐ. டி. மோகனின் வீட்டுக்குப் போய் அவனைக் கேலி செய்து கொண்டிருக்கிறார்களாம்.

அப்புறம்?

அப்புறம் என்ன! கதையும் நாட்டுக்குப் போச்சு; நானும் வீட்டுக்கு வந்தேன்!

முற்றும்



# இரவில் நடந்தது

த. ஜானகி

இரவு மணி பன்னிரண்டு அடித்தது. ஆங்கில புத்தகத்தை மூடிவைத்தேன். விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக்கொண்டேன். உடனே வாயிற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. இரண்டாவது ஆட்டத்திற்குச் சென்றிருந்த என் அக்காவும் அத்தானும்தான் படம் பிடிக்காமல் பாதியிலே வந்து விட்டார்களோ என்று நினைத்துக் கொண்டே கதவைத் திறந்தேன். வாயிற்படி அருகிலே இரண்டு பேர் நின்றுகொண் டிருந்தனர், ஒருவர் சூட்டும் கோட்டும் அணிந்துகொண் டிருந்தார். மற்றொருவர் ஜிப்பாவும் வேட்டியும் அணிந்திருந்தார்.

என்னைப் பார்த்ததும், ''தம்பி, தெருவிலே ஓர் இளைஞன் மயக்கமாய் விழுந்து கிடக்கிறான். கொஞ்சம் உன் வீட்டிலே அவனைப் படுக்க வைக்க இடம் கொடு. நாங்கள் முதலுதவி செய்கிறோம். அவன் சுய உணர்வு பெற்றதும் அவனைக் கொண்டுபோய் நாங்கள் வீட்டில் விட்டு விடுகிறோம். அவன் யாரோ தெரியவில்லை. பாவமாக இருக்கிறது. நாங்கள் பாட்டிற்கு இருவரும் பேசிக்கொண்டே வந்தோம். தற்செயலாக எங்கள் கண்ணில் பட்டது. இப்பொழுது பஸ்கூட இல்லை. ஆதலால் தயவு செய்து உன் வீட்டிலே..'' என்று கூறினார் சூட்டு அணிந்தவர்.

'ஆகா. தெருவிலே மயக்கமாய் விழுந்து கிடக்கும் இளைஞனின் பேரில்தான் இவர்களுக்கு எவ்வளவு கருணை..! என்ன பெருந்தன்மையான குணம் இவர்களுக்கு! நான் கட்டாயம் இடம் கொடுத்தே தீர வேண்டும். இந்தச் சிறு உதவி கூடவா செய்யக்கூடாது?' என்று எண்ணிக்கொண்டு, ''இதென்ன ஸார், பிரமாதம்! அவனைத் தூக்கிக் கொண்டு வாருங்கள்'' என்றேன்.

''தம்பி. என்ன தாராள குணம் உனக்கு! இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை எல்லோருக்கும் இருந்தால் நம் நாடு ஏன் இப்படி இருக்கிறது?'' என்று கூறினார் ஜிப்பா ஆசாமி.

நான் மனம் மகிழ்ந்து உள்ளே வந்து இரும்புக் கட்டிலை ஒழித்து வைத்தேன்.

அவர்கள் இருவரும் சுமார் இருபது வயது மதிக்கக்கூடிய ஓர் இளைஞனைக் கட்டிலில் படுக்க வைத்தனர்.

''மூச்சு இருக்கிறதா, இல்லையா என்றுகூடச் சந்தேகமாக இருக்கிறது. நான் முதலுதவி செய்யப் போய் ஏதாவது முதலுக்கே ஆபத்து வந்துவிடப் போகிறது என்று எனக்குப் பயமாக இருக்கிறது, மிஸ்டர் மோகன். நீங்கள்

இங்கேயே இவனைப் பார்த்துக் கொண்டு இருங்கள். தம்பி, நான் போய் டாக்டரை அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு வெளியே சென்றார் ஜிப்பாக்காரர்.

என் உள்ளம் திக் திக்கென்று அடித்துக்கொண்டது.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் கையில் தோல் பையுடன் டாக்டர் வந்தார். இளைஞனைப் பரிசோதித்தார். பிறகு, ''ஸார். இது சாதாரண மயக்கம்தான். ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வாருங்கள், முகத்தில் அடித்துத் தெளித்தால் உணர்வு பெற்று விடுவான். உடம்பு மிகவும் பலஹீனமாக இருக்கிறது. அது தான் காரணம்; வேறொன்றுமில்லை'' என்றார்.

ஒரு டம்ளரில் தண்ணீர் கொணர்ந்தேன். டாக்டர் தண்ணீரை வாங்கிக்கொண்டு முகத்தில் தெளித்தார். உடனே அந்த இளைஞன் லேசாக அசைந்து கொண்டே கண்களைத் திறந்தான்.



டாக்டர் முகத்திலே புன்முறுவல் மின்னியது.

''பார்த்தீர்களா ஸார். நான் அப்பொழுதே சொன்னேன் அல்லவா, இது சாதாரண மயக்கம்தான் என்று? ஏதாவது சூடாக, பானம் கொடுத்தால் நல்லது'' என்றார்.

''இந்த நேரத்திலே ஹோட்டல்கள் எல்லாம் மூடியிருக்கும். எங்கள் வீட்டிலே ஹார்லிக்ஸ் [illegible]றது. கரைத்துத் தருகிறேன்'' என்று நான் கூறினேன்.

''தம்பி. ரொம்பவும் நன்றி'' என்றார் சூட்டு அணிந்தவர்.

உள்ளே சென்று 'ஸ்டவ்'வைப் பற்ற வைத்தேன். சில நிமிஷங்களில் 'ஹார்லிக்ஸ்' தயாராகியது. கோப்பையை எடுத்துக்கொண்டு ஹாலுக்குள் நுழைந்தேன்.



அந்த இளைஞன் ஹார்லிக்ஸைக் குடித்துவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டான். ''தம்பி, இப்பொழுது இவர் எல்லாம் சொன்னார். உனக்குத்தான் சிரமம். ஒரு பத்து நிமிஷம் தூங்கினால்தான் உடம்புக்கு நல்லது. அவன் தூங்கி எழுந்த பிறகு அவனை வீட்டில் கொண்டு விடுங்கள். நடுவில் ஒருவரும் எழுப்ப வேண்டாம். என்ன, நான் வரட்டுமா?'' என்று கூறிக்கொண்டே விடைபெற்றுக் கொண்டார் டாக்டர். சூட்டு அணிந்தவர்வழியனுப்பச் சென்றார்.

நான் நாற்காலியில் அமர்ந்து புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தேன். பத்து நிமிடங்கள் உருண்டோடி யிருக்கும்.

கதவை உள் பக்கம் தாளிட்டுக் கொண்டு சூட்டு அணிந்தவர் வேகமாக என் முன் ஆஜரானார். ''தம்பி, உங்க வீட்டிலே நகை, பண்டம், பாத்திரம், பணம் எல்லாம் எங்கே இருக்கிறது என்று மரியாதையாகச் சொல்லிவிடு. இல்லாவிட்டால்..'' என்று கூறிக்கொண்டே என் முன்னே ஒரு கூரிய கத்தியை நீட்டினார். விளக்கு வெளிச்சத்தில் அந்தக் கத்தி தங்கத் தகடு போல் தக தகவென்று மின்னியது.

என்னால் பேசவே முடியவில்லை. உடல் கிடு கிடுவென்று நடுங்கியது. வியர்வை ஆறாகப் பெருக ஆரம்பித்தது.

''இவனைப் போய் நீ கேட்கிறாயே. பேசாமல் அவனைக் கட்டிப் போட்டு விட்டு நம்ப வேலையை நாம் வெற்றிகரமாக முடித்துக் கொள்ளலாம். நேரமாய் விட்டது'' என்று கூறிக்கொண்டே ஜிப்பா அணிந்தவர் என் கை கால்கள் இரண்டையும் கயிற்றினால் பிணைத்தார். பிறகு ஒரு துணிப் பந்தை எடுத்து என் வாயில் திணித்தார். பயத்தினால் என்னால் கத்தக்கூட முடியவில்லை.

'உதவி செய்ததற்குக் கை



பிள்ளையார் : மூஷிகமே! ராகு காலமாவது, குளிகை காலமாவது! பன்னிரண்டு மணி வரையிலே யார் பசியோடு காத்துக்கொண் டிருப்பது?

---

மேல் பலன் கிடைத்துவிட்டது. நல்லவர்கள் போல் வேஷம் போட்ட நயவஞ்சகர்கள்' என்று பொருமியது என் உள்ளம்.

உள்ளே பெட்டி திறக்கப்படும் ஓசையும் அதைத் தொடர்ந்து பாத்திரங்கள் உருளும் ஓசையும் கேட்டன.

'ஐயோ . . அக்கா எவ்வளவு பிடிவாதம் செய்து ஒவ்வொரு நகையையும் செய்துகொண்டாள். எவ்வளவு ஆசைப்பட்டு வெள்ளிப் பாத்திரங்களாக வாரிக் குவித்தாள். அவைகளை இப்படியா கள்வன் கொண்டு போக விடுவது? என்னை நம்பி வீட்டை விட்டுச் சென்றிருக்கும் பொழுது நான் இப்படியா கோட்டை விடுவது?'

எனக்கு எப்படித்தான் அவ்வளவு தைரியம் வந்தது என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது. கையை லேசாகத்தான் கட்டிப்போட்டிருந்தார்கள். மெல்ல, கஷ்டப்பட்டு வலது கையை விடுவித்துக்கொண்டு வாய்த் துணியை எடுத்து அருகில் இருந்த மேஜையின்மீது வைத்தேன். சற்றுமுன் உள்ளே அன்று மாலையில் புதிதாகச் சோறு வடித்திருந்த கஞ்சி என் கண்ணில் பட்டது. என் மூளை வேலை செய்தது.

சத்தம் போடாமல் உட்கார்ந்தவாறே நகர்ந்துகொண்டு ரூமை விட்டு அவர்கள் வெளியே வரும் இடத்துக்கு வந்தேன். ஓசைப்படாமல் கஞ்சிவட்டிலைக் கவிழ்த்தேன். பாத்திரங்களை மூட்டை கட்டுவதில் முனைந்திருந்த அந்தக் கள்வர்கள் என்னைக் கவனிக்கவேயில்லை. கால் கட்டை என்னால் அவிழ்க்க இயலவில்லை. மறுபடியும் உடல்கள் வளைய நகர்ந்துகொண்டே வாயிற் கதவின் அருகில் சென்றேன். பிறகு நின்றுகொண்டு தாழ்ப்பாளை அகற்றினேன். அந்த ஓசையைக் கேட்டு அக்கயவர்கள் ஆத்திரத்தோடு கோபமாக வெளியே வந்தனர். நான் எதிர்பார்த்தபடியே சிமெண்ட் தரையில் கால் வைத்ததும் தடால் என்று வழுக்கி விழுந்தனர்.

"அடே தம்பீ. நாசமாய்ப் போக! உன்னை என்ன செய்கிறேன் என்று பார்!" என்று எனக்கு ஆசீர்வாதம் கொடுத்துவிட்டு, "டேய் சோமு! எழுந்திருந்து தொலைடா. நீ மயக்கமாய் நடித்தது போதும். தூங்கித் தொலைச்சது போதும்.

---

விளக்கிலே....



இரு முகங்கள்

ஆ! கால் எலும்பு முறிந்துவிட்டது போல் தோன்றுகிறதே. அடேய் போதுமடா..உன் நாசமாய்ப் போகிற தூக்கம். எழுந்திருந்து தொலேடா!'' என்று இரைந்தனர். சோமு எப்படி எழுந்திருப்பான்?

நான் ரொம்ப வேகமாக வாசலுக்கு வந்து, ''திருடன். ஐயோ. திருடன். உதவிக்கு ஓடி வாருங்கள். !'' என்று கத்தினேன்.

அக்கம் பக்கம் கூடியது. நல்லவர்கள் போல் நடித்த அந்த நயவஞ்சகர்கள் பிடிபட்டனர். சிறிது நேரத்தில் கான்ஸ்டபிள் புடை சூழ இன்ஸ்பெக்டர் வந்தார். நான் விஷயத்தை விரிவாகக் கூற ஆரம்பித்தேன்.

''மனமிரங்கியவர்கள்போல் வஞ்சகமாகவே இவர்கள் உதவி செய்ய முன்வந்துள்ளனர் என்று முதலில் நான் நினேத்தேன். இந்த இரும்புக் கட்டிலில் கால் வைக்கும் பக்கத்தில் ஓர் இரும்புக் கம்பி நீட்டிக் கொண்டிருக்கும். ஆதலால் அதில் நாங்கள் படுத்துக்கொள்வதே கிடையாது. இவர்கள் சோமுவைக் கொண்டு போட்டதும் அவன் காலில் அது 'சுரீர்' என்று குத்தியது போலும். திடுக்கிட்டுக் கண்ணேத் திறந்துகொண்டான். வலியினுல் முகத்தைச் சுளித்துக் கொண்டான். இதைக் கவனிக்க நான் தவறவில்லே.

''அப்பொழுது என்னவோ போல இருந்தது. காலேயில் டிபன் சாப்பிட்டுக் கை கழுவக் குழாயடிக்குச் சென்றேன். அப்பொழுது எங்கள் வீட்டு வேலேக்காரியுடன் ஓர் ஆசாமி பேசிக்கொண்டிருந்தார். என் அக்கா எப்பொழுது சினிமாவுக்குப் போனுலும் நாலுபேரிடம் சொல்லிக்கொண்டு போகும் வழக்கத்தை, பணத்திற்கு மயங்கி உண்ட வீட்டிற்குத் துரோகம் நினேக்கும் அந்த வேலேக்காரிதான் உளவு சொல்லியிருப்பாள். அல்லது இவர்கள் அவளது கையாட்களாகவும் இருக்கலாம். டாக்டர் வேஷம் அணிந்து கொண்டாலும் அவர் குரலே எனக்குக் காட்டிக்கொடுத்து விட்டது, காலேயில் வேலேக்காரியுடன் பேசிக்கொண்டிருந்த ஆசாமி இவர்தான் என்று. ஆதலால் என் சந்தேகம் இன்னும் வலுவடைந்தது. என் அத்தானுக்கு இரவில் தூக்கம் வராததால் டாக்டரிடமிருந்து தூக்க மருந்து வாங்கி வைத்திருந்தார். நான் ஹார்லிக்ஸில் அந்த மருந்தைக் கலந்தேன். சோமுவும் குடித்துவிட்டான். அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் தான் தெரியுமே! இனிமேல் அவன் காலேயில்தான் எழுந்திருப்பான். அவனே ஒருவரும் எழுப்ப முடியாது'' என்று கூறி முடித்தேன்.

இன்ஸ்பெக்டர் அவர்களேத் தம் சிறை விருந்தினராக அழைத்துச் சென்ருர்.

---




சரித்திர ஆசிரியர்: சிவாஜியோடு சண்டை போட்டது யார்?

பையன்: ஐயையோ! நான் போடல்லே, சார்! எனக்கு அவன் விவகாரமே தெரியாது, சார்!

# பக்கத்துக்குப் பத்து!

டி. ஏகாம்பரம்

கடலூர்
3-5-'57

'வெத்து வேட்டு' ஆசிரியருக்கு,

வணக்கம் பல. நான் அனுப்பிய 'தலைவலி' என்னும் கதை நன்றாக இருக்கிறதா? அதை அனுப்பி மாதம் மூன்று ஆகிறது. அதனைப் பற்றிய விவரம் விரைவில் தேவை. இத்துடன், 'நம்பாதே!' என்னும் கதையை அனுப்பியுள்ளேன். அனைத்தும் ஏற்று அடியேனை ஆதரிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
அதிர்வேட்டு அண்ணாசாமி.

சென்னை
7-5-'57

அதிர்வேட்டு அண்ணாசாமிக்கு,

நீ அனுப்பியிருந்த 'தலைவலி' எனக்கும் அதே வலியை கொடுத்து விட்டது. உனது 'நம்பாதே'யைப் படித்த உதவி ஆசிரியர் என்னிடம் வந்து அக் கதையை நம்ப வேண்டாம் எனக் கூறிவிட்டார். இனியாவது நல்ல கதைகளாக எழுதியனுப்பு. கட்டாயம் பிரசுரிக்கிறேன்.

இப்படிக்கு,
ஆசிரியர் அருணாசலம்.

கடலூர்,
10-5-57

ஆசிரியர் அவர்களுக்கு,

உமது வெத்துவேட்டு வேலையெல்லாம் இந்த அதிர்வேட்டிடம் செல்லாது. நான் அனுப்பிய இரு கதைகளையும் வெறுத்து ஒதுக்கி விட்டீர். முடிவாக முயற்சி செய்து, 'துன்பத்தின் எல்லை இதுதானோ?' என்ற கதையை அனுப்பியுள்ளேன். அக் கதை முதலிலிருந்து முடிவு வரை படிக்கின்றவரைக் கண் கலங்கச் செய்யும் சோக நடையில் எழுதப்பட்டுள்ளது. இதனை நீர் மறுப்பீரேயானால் எனது ஊரிலுள்ள மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஓர் உண்ணாவிரத இயக்கம் ஆரம்பிப்போம் என அறிவித்துக் கொள்கிறேன். உஷார்!

இங்ஙனம்
அ. வே. அண்ணாசாமி.



சென்னை
15-5-'57

அண்ணாசாமிக்கு,

உனது 'துன்பத்தின் எல்லை இதுதானோ?' என்ற கதை கிடைக்கப் பெற்றேன். படித்தும் பார்த்தேன். இதுவரை எவரும் எழுதியிராத புது முறையில் மூன்று பக்கங்கள்

முழுவதும் 'கண்ணீர்! கண்ணீர்!' என்று எழுதியிருக்கிறாய். இவ்வளவு கண்ணீர் யார் வடித்தது என்பதை நீ எழுதவில்லை. இருப்பினும், இவ்வளவு கண்ணீர் ஒருவன் வடித்திருப்பானாயின் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் தற்பொழுது குறைந்திருக்கும் நீர் மட்டம் உயரும் என்பதில் சந்தேகமேயில்லை. ஆகவே இக் கதை 'வெத்து வேட்'டில் வெளி வந்தால், எங்கள் பத்திரிகை சுத்த வெத்துவேட்டு என்பார்கள் சிலர். பலர் முன்னரே அவ்வாறு கூறிவிட்டதால் தான் சிலர் என எழுதியுள்ளேன். எனவே இனிமேல் நல்ல கதைகளாக எழுதியனுப்பு. முடிந்தால் சித்திரமும் வரைந்துஅனுப்பு.



அன்பு, ஆசிரியர் அருணசலம்.

கடலூர்
17-5-57

ஆசிரியர் அவர்களுக்கு,

நான் எழுதிய மூன்று கதைகளுக்கும் நாமத்திற்கும் சம்பந்தம் உண்டென நினைக்கிறேன். தங்களது கட்டளையைச் சிரமேற்றாங்கி அடுத்த இதழில் 'வெத்து வேட்'டில் பிரசுரிப்பதற்காக ஒரு நவநாகரிக மனிதனின் படம் ஒன்றை வரைந்து அனுப்பியுள்ளேன். அத்துடன் ஒரு கவிதையையும் அனுப்பியுள்ளேன். வெறுக்காது ஏற்கவும்.

இங்ஙனம்,
அதிர்வேட்டு, அ. சாமி,

சென்னை
20-5-'57

அதிர்வேட்டுச் சாமிக்கு,

உன்னிடமிருந்து வந்த கவிதையை எனது நண்பர் ஒருவரிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னேன். அன்றிலிருந்து அவர் என்னுடன் பேசுவதில்லை. நீ வரைந்த படத்தை நான் பார்த்துக்கொண்டிருக்கையில் தற்செயலாக அங்கு வந்த என் தம்பி அதைப் பார்த்து அலறி, படுத்த படுக்கையாகக் கிடக்கிறான்: நீ வரைந்த படத்தில் மேல்புறம் எது, கீழ்ப்புறம் எது என்றே தெரியவில்லை. நான் எவ்வளவு முயன்றும் மனிதனது முகம் எது எனக் கண்டு பிடிக்க முடியவில்லை. நீ எழுதும் எழுத்து டாக்டருடையபில் கையெழுத்தைவிட மோசமாக இருக்கிறது. தமிழன்னையைத் தயவு செய்து விட்டுவிடு! உன்னிடம் மாட்டிக்கொண்டு அந்த அம்மாள் படுகிற பாடு..

அன்பு, ஆசிரியர், அ. சலம்.

கடலூர்
24-5-'57

ஆசிரியருக்கு,

கையெழுத்துப் போட்டியிலே முதல் பரிசு பெற்றவன் நான். எனது கையெழுத்தைப் பழித்த காரணத்திற்காக உமக்குத் தண்டனை வழங்கியுள்ளேன். அதாவது நான் எழுதிய 'தண்டனை' என்னும் கதையை அனுப்பியுள்ளேன். வெறுத்து ஒதுக்காது, ஏற்று வெளியிடுக.

இங்ஙனம்,
அ. வே. அ.

சென்னை
27-5-'57

அ: வே: அ: வுக்கு,

உனது தளரா முயற்சியையும், வளராக் கற்பனையையும் கண்டு மனம் மகிழ்ந்தேன். உனக்கு ஊக்கம் ஊட்டும் வண்ணம் இக் கதையையாவது வெத்து வேட்டில் வெளியிடலாம் என எண்ணி யுள்ளேன். அதற்குப் பதிலாக....

அன்பு,
ஆ. அ.

கடலூர்
30-5-'57.

உயர்திரு ஆசிரியரே!

நன்றி! நன்றி! ஆழ்கடலில் தவித்த என்னை நோக்கி ஆடிவரும் சிறு படகைப் போல வந்தது நீங்கள் அனுப்பிய கடிதம். தாங்கள் கடிதத்தின்மேல் தபால் தலை ஒட்டாமலே, அதனை அனுப்பிவிட்ட காரணத்தால் தபால்காரர் என்னிடமிருந்து இருபத்தைந்து நயா பைசாவைத் தட்டிக்கொண்டு போய்விட்டார். கவலையை விடும்! அண்ணலே! அருள் ஒளியே! நாடுவது யாதோ?

இங்ஙனம்,
அ. வே. அ. சாமி.

சென்னை
3-6-'57.

அண்ணுசாமிக்கு,

எமது பத்திரிக்கையில் உனது கதையை வெளியிடுவதற்குப் பக்கத்திற்குப் பத்து வீதம் மூன்று பக்கத்திற்கான முப்பது ரூபாயை அனுப்பி வை. இந்தப் பணத்தில் ஒரு நயா பைசா குறையாமல் நீ அனுப்பினுல்தான் உனது கதை பிரசுரிக்கப்படும்.

இப்படிக்கு,
அ: ஆசிரியர் அ:

---

# பூங்கொத்து

ஒரு நெல்லிக் காயில் இரண்டு ஆரஞ்சுப் பழங்களின் சத்துப் பொருள்கள் இருக்கின்றன.

தக்காளி, வாழை முதலிய பழங்களைப்போல ஆரஞ்சைச் செடியிலிருந்து பறித்துப் பழுக்க வைக்க முடியாதாம். செடியிலிருந்து பறித்த பின்பு ஆரஞ்சு பழுக்காது.

உலகிலேயே முதன் முதலில் தயாரிக்கப்பட்ட கலப்பு உலோகம்—வெண்கலம்.

குழந்தைகளுக்கு நிமிடத்திற்கு 100 தடவை இதயம் சுருங்கி விரிகிறது.

சைக்கிளில் சுமார் 250 பகுதிகள் உண்டு.

நீரில் வாழும் திமிங்கிலத்திற்கு மூச்சுப்பை உண்டு. அது குட்டியிட்டுப் பால் கொடுக்கும்.

நாதர் ஷா மன்னரால் கவர்ந்து செல்லப்பட்ட ஷாஜஹானுடைய மயிலாசனம் இப்பொழுது லண்டன் மியூசியத்தில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

உலகிலேயே பெரியது என்று போற்றப்படும் பஸிபிக் மகா சமுத்திரத்தின் பரப்பளவு 63,801,700 சதுர மைல்கள்.

—'ரமிலன்'

# என் அண்ணி

## என். சிவஞானம்

"அண்ணியாம் அண்ணி! சற்று நேரம் படிக்க விடாமல்...." என்று எண்ணிய அந்த இளம் உள்ளம். அதற்குள் மறுபடியும், "கமலா, கமலா! வந்திட்டியா..?" என்று கூப்பிட்டதைக் கேட்டதும், "இதோ வந்து விட்டேன் அண்ணி" என்று சொல்லிக்கொண்டே ஓடினாள்.

"என்னடி கமலா செய்துகிட்டிருந்தே? படிச்சிக்கிட்டிருந்தியா?" வெகு அக்கறையுடன் கேட்டாள். "ஆமாம் அண்ணி" என்றாள் கமலா. "சரி, போய் உன் அண்ணனுக்குச் சோடா ஒண்ணு வாங்கி வா" என்று தன் அண்ணி கூறியதும் கமலா, "அண்ணி, அதோ மோகன் அண்ணன் படுத்திருக்கே, போயிட்டு வரச்சொல்வதுதானே" என்று எப்படியோ தைரியமாகச் சொல்லிவிட்டாள். இருந்தும் குரலில் நடுக்கம் இல்லாமல் இல்லை. கமலாவின் இருதயம் வேகமாக அடித்துக்கொண்டது - என்ன விபரீதம் நடக்கப் போகிறதோ என்று எதிர்பார்த்துப் பயந்தாள்.



கமலாவின் அண்ணி காமாட்சி கோபத்தோடு, "ஊம்! அவ்வளவு தூரம் ஆகிப்போச்சா? ஏண்டி, மோகனைப் போகச் சொல்ல எனக்குத் தெரியாது? நீ சொல்லித்தான் எனக்குத் தெரியணுமா? பேசாமல் போய் வாங்கிட்டு வா" என்று சொல்ல, கமலாவும் சிறிது அச்சத்துடன், "சரி அண்ணி, காசு கொடு" என்று சொல்லி இரண்டணாவை வாங்கிக்கொண்டு தெருக்கோடியிலிருந்த நாயக்கர் சோடாக் கடையை நோக்கிப் புறப்பட்டாள்.

'உம்; நம் அம்மா மட்டும் இருந்தால் நாம் இப்படிக் கஷ்டப் படுவோமா? இல்லை. அண்ணிதான் நம்மைத் துன்புறுத்துவாளா? ஆமாம், அண்ணி ஏன் எப்பொழுதும் மோகனுக்கு ஒரு வேலையும் வைப்பதில்லை? எப்பப் பார்த்தாலும் நமக்கே வேலை வைக்கணும்? ஒரு வேளை அண்ணிக்கு என்னைப் பிடிக்கவில்லையோ?



"ஏண்டா இப்பத்தானே பத்து ரூபாய்க்குப் புத்தகமெல்லாம் வாங்கிகொடுத்திருக்கேன். இன்னம் என்னடா உனக்கு அழுகை?"

"அதையெல்லாம் பைண்டு பண்ணணும்; அதுக்கு ஒரு பதினைஞ்சு ரூபா கொடு, அப்பா!"

---

இருக்கலாம் இருக்கலாம்' என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டே கடையை அடைந்த கமலா சோடா பாட்டிலை வாங்கிக் கொண்டு புறப்பட்டாள். இப்பொழுதும் அவள் பிஞ்சு மனம் என்னென்னவோ எண்ணியது. அவற்றின் விளைவாக, சில முறை பெருமூச்சுகளும் வெளிப்பட்டன. கமலாவை அவள் அண்ணி அப்படியா துன்புறுத்துகிறாள்?

"கமலா, பாட்டிலை அண்ணனிடம் கொடுத்துவிட்டு நீ போ. அப்பா உன்னைப் பார்க்கணும் என்றார்" என்றாள் காமாட்சி.

"எந்த அப்பா, அண்ணி, என்னைப் பார்க்கணும் என்றார்?"

"உங்க அப்பாதான்."

"எங்கள் அப்பாவா வந்திருக்கிறார்?" என்று கேட்ட அவள் உடனே, "அப்பா, அப்பா" என்று கூப்பிட்டுக்கொண்டே வெளிப் பக்கத்து அறைக்கு வந்தாள். அங்கே அவளுடைய தந்தையைக் கண்டதும் ஓடோடிச் சென்று மடியில் படுத்துக் கொண்டாள். சோமசுந்தரத்திற்கு - கமலாவின் தந்தைதான்-ஒரு நிமிடம் தன் கண்களையே நம்பமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது. எலும்பும் தோலுமாகத்தான் மகள் இருப்பாள் என்று எதிர்பார்த்த தந்தை, பெற்ற தகப்பன்-தன் மகள் அடையாளமே தெரியாமல் பருத்து அழகாக விளங்கியதைக் கண்டு அசந்துவிட்டார். அவர் அவள் முதுகை வருடியவாறே, "என்னம்மா கமலா, அடையாளமே தெரியாதபடி இந்த மூணு வருஷத்தில் மாறி இருக்கிறாயே...." என்று சொல்லிவிட்டு, "ஆமாம், இப்பொழுது எங்கே போயிருந்தே?" என்று கேட்டார். "அண்ணாவுக்குச் சோடா வாங்கி வந்தேன்" என்றாள் கமலா சலிப்போடு. அவள் தன் தந்தையிடம் எதையோ கூறத் துடிதுடித்தாள். ஆனால் மூன்று வருஷங்களுக்குப் பிறகு தன் தந்தையைப் பார்த்ததால் ஏற்பட்ட ஆனந்தத்தால் அவள் நினைத்தது முழுவதையும் உடனே சொல்ல முடியவில்லை. "சபாஷ்! பரவாயில்லையே! அண்ணி நல்லா 'டிரெயினிங்' தரா போலிருக்கே" எனறு அவர் மிகவும் பூரிப்போடு கூற அவள், "போங்கள் அப்பா, அண்ணி சுத்த மோசம். என்னைக் கண்டாலே பிடிக்கல்லே. அண்ணி மோகனுக்கு வேலை வைப்பதில்லை. கண்டிப்பதில்லை. ஆனால் எனக்கே எல்லா வேலையும் வைக்கிறாள்; எதற்கெடுத்தாலும் மிரட்டிக் கண்டிக்கிறாள்" என்று புகார் செய்தாள். இதைக் கேட்டதும் சோமசுந்தரம், "அம்மா கமலா, அப்படிச் சொல்லாதே உன்னைப் பெற்று ஆறு வருடங்கள் வளர்த்த பின் இறந்து போய்விட்ட உன் அம்மாவைவிட, அதற்குப்பின் மூன்றாண்டுகள் கஷ்டப்பட்டு வளர்த்த என்னைவிட, உன் அண்ணி மிகவும் நல்லவள். அவள்தானே உன்னை இப்படிப் போஷித்திருக்கிறாள்? சரி, மோகனுக்கு வேலையே வைப்பதில்லை

என்கிறாயே; அண்ணா வாங்கிவரும் சாக்லேட், மிட்டாய், பிஸ்கோத்துகளில் யாருக்கு அதிகமாக முதலில் கொடுக்கிறாள்? உனக்குத்தானே? சரி; தன் பக்கத்தில் படுக்க வைத்துக்கொண்டு கதை சொல்லித் தூங்க வைப்பது யாரை? உன்னைதானே? கமலா! கண்டிப்பு எங்கு அதிகம் என்கிறாயோ அங்கேயேஅன்பும் அதிகமாக இருப்பது சரியல்லே? இன்னொன்று; மோகன் ஒரு முரட்டுச் சோம்பேறி; அவனுக்கு வேலை வைத்தால் செய்யமாட்டான் என்பது உறுதி. சென்னையிலிருந்தால்தான் இப்படி. மதுரை வந்தால் திருந்தி விடுவான் என்று இங்கே அனுப்பிவிட்டுத் தனியாளாய் நான் அங்கே அவதிப்பட்டேன். ஆனால் அவன் திருந்தவில்லை. நீயும் அப்படி ஆகக் கூடாது, நன்றாக வேலைகள் செய்து பழகவேணும் என்றே உனக்கு வேலைகள் வைக்கிறாள் உன் நல்ல அண்ணி'' என்று சொன்னார்.

''அப்பா, அண்ணி ரொம்ப நல்லவள். அண்ணி, என் அண்ணி தானே? மோகனின் அண்ணி இல்லையே?'' என்று கூறிய அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது. அப்பொழுது அங்கே அவளைத் தேடிக் கொண்டு வந்த காமாட்சி அவள் கண்ணீரைக் கண்டதும்,



''ஏன் கண்ணு அழறே? சாக்லேட் வேணுமா?'' என்று கேட்டுத் தன் பட்டுச் சேலையின் தலைப்பால் கண்களைத் துடைத்தாள். பிறகு போய் கை நிறையச் சாக்லேட் கொண்டு வந்து கொடுத்து, கமலாவைத் தூக்கித் தோளில் கிடத்திக் கொண்டாள். கமலாவும், ''அண்ணி!'' என்று, அன்பு பொங்கக் கூறி அவள் கழுத்தை இறுக்கி வளைத்து அணைத்துக் கொண்டாள். அவள் அன்பு மனம், ''என் அண்ணி, என் அண்ணி'' என்று இன்ப கீதம் பாடியது.

# கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர் கதைப் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம். பலர் வேண்டுகோளுக்கிணங்க தொடர்கதை அனுப்ப வேண்டிய தேதியை ஒரு மாதகாலம் தள்ளிப் போட்டிருப்பதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

நிபந்தனைகள்:—

1. சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

2. காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் விட்டு எழுத வேண்டும்.

3. கண்ணன் இதழில் 6 பக்கங்கள் வீதம் 12 இதழ்களுக்கு மேல் போகாமல் இருக்கவேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்ச்சியாக வெளியிட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.

5. குழந்தைகள், குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

6. முடிவுத் தேதி 30-9-'57.

—ஆசிரியர்




**பாரதி தங்கராசன்**

ஒரு மலை: நெட்டு நெடுவென்று அகில் மரம் போல் உயர்ந்த மலை! மிகவும் கர்வம் அதற்கு, தன்னுடைய உயரத்தில்.

அது பெருமைப் பட்டது: தான் மிகவும் உயர்ந்தவன், தனக்கு நிகர் உலகில் யாரும் இல்லை என்று! அதற்கு ஓர் ஆசை; 'நாம் இவ்வளவு உயரமாய் இருக்கிறோமே அப்படியே சூரியனை எட்டிப் பிடித்துவிட்டால் என்ன?' என்று.

பனிக்காலம்: ஒரு நாள் இரவு மேகக் கூட்டம் மெல்ல மெல்லக் கீழே இறங்கிற்று. மலையின் மேல் படர்ந்தது. மலை என்ற ஒரே ஒரு கம்பத்தின் மேல் முகில் என்ற கீற்றுகளினால் பந்தல் வேயப்பட்டிருந்தது!

தூங்கிக்கொண்டிருந்த மலை திடுக்கென்று கண் விழித்தது. தலையில் ஏதோ கனக்கிறதே என்று தலையைத் தடவிக் கொண்டது. என்ன ஆச்சரியம்! அளவிட முடியாத சந்தோஷம்! "என் தலை மேல் வானமல்லவா இருக்கிறது!" அதாவது வானத்தையே தன் தலையினால் தாங்கிக்கொண்டிருப்பதாக நினைத்தது!

பிறகு அதற்கு உறக்கமே வரவில்லை. பேராசைக்காரன் இரவில் தூங்க மாட்டானாமே? சூரிய உதயத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தது.

'இந்த வானில்தானே சூரியன் பவனி வரும், வரட்டும் வரட்டும்; வானத்தின் உச்சியையே இப்போது நான்தானே தாங்கிக் கொண்டு இருக்கிறேன்! இந்த உச்சிக்குச் சூரியன் வரட்டும்! லபக்கென்று பிடித்துக் கொள்ளுகிறேன்!' என்று திட்டம் போட்டது. அதன் இதயத்தில் இன்பக் கனவுகள் கும்மாளம் போட்டன.

விடி வெள்ளி முளைத்தது.

கீழ்த் திசையில் தங்கச் சரங்கள் எழுந்தன. சூரியனும் முகம் காட்டினான்.

"ஓஹோ! சூரியன் வந்து விட்டான்" என ஆனந்த முழக்கமிட்டது மனத்தில் மலை.

சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக மேலே எழுந்தது. அது மேலே எழ எழ, இன்னும் கொஞ்ச நேரம் இன்னும் கொஞ்ச நேரம் என்று ஆசையுடன் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தது மலை.

சூரியன் ஒளி உக்கிரமாயிற்று! மேகங்கள் விலகி ஓடின!

நடுப்பகல். மலை எதிர்பார்த்த பொழுது வந்துவிட்டது அல்லவா? சூரியனை லபக்கென்று பிடித்துக் கொள்ள மலை தலைக்குமேல் தன் (சி) கரங்களை நீட்டியது. கைகளில் ஒன்றுமே சிக்கவில்லை! திகைப்புடன் - வியப்புடன் - மலை அண்ணாந்து பார்த்தது. எப்போதும் போல் வானம் யாருக்கும் எட்டாத உயரத்தில்தான் இருந்தது. அந்த உச்சியில் நின்றபடி சூரியன் மௌனப் புன்னகை புரிந்தது. மலை மலைத்தது.



# ராட்டினக் குதிரை

பூவண்ணன்

சுற்று கின்ற பூமியில்
சுற்று கின்ற ராட்டினம்.
சுற்றும் ராட்டி னத்திலே
சுற்றும் குதிரை ஏறுவோம் 1

வெள்ளை, பச்சை மஞ்சள்தான்
வேண்டு கின்ற நிறத்திலே
உள்ள குதிரை ஏறுவோம்!
உவகை கொள்ளச் சுற்றுவோம். 2

ஓடு கின்ற குதிரைகள்
உலகில் உண்டு பார்க்கலாம்
ஓடி டாமல் பறந்திடும்
உயர்ந்த குதிரை பாநங்கள் 3

எல்லை யில்லா நேரமே
இளைப்பு இன்றிச் சுற்றுமே!
தொல்லை தருவ தில்லையே
கொள்ளும் கேட்ப தில்லையே! 4

# நீங்களும் நானும்

[இந்தப் பகுதிக்கு இப்பொழுது ஏராளமான கடிதங்கள் வந்துகொண் டிருக்கின்றன. முடிந்த வரையில் வரிசைக் கிரமமாகப் பதில்கள் தரப்பட்டு வருகின்றன. தங்கள் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லையே என்று மீண்டும் கடிதம் எழுதாதீர்கள். இரண்டு இதழ் பொறுத்திருந்து பாருங்கள். அதற்குள் விடை வர வில்லையானால் வேறு கேள்விகள் எழுதிக் கேட்க வேண்டியதுதான்.
—ஆர்வி.]

எஸ். ராமகிருஷ்ணன், உப்பிலி.

கே: எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆசை முதலில் உங்களுக்கு எதனால் உண்டாயிற்று? பொது வாக ஏன் உண்டாகிறது?

ப: அதுவா, எனக்குச் சரியாக ஞாபகமில்லை. ஆனால் அப்போது ஏதோ மண்டைக் கோளாறு ஏற் பட்டிருக்க வேண்டும் என்று நினைக் கிறேன். பொதுவாக அந்த ஆசை ஏன் உண்டாகிறது என்பது பெரிய கதை. ஒரு நாள் எழுதிவிட்டு ஒன்பது நாள் சோம்பேறித்தன மாக இருக்கலாம் என்கிற எண் ணத்தில் தொடங்குகிறது அது.

கே. ஜி. ராமசந்திரன், தியாகராயநகர்

கே: அணுச் சக்தியால் கப்பல், ரெயில், விமானம் இவற்றை இயக்கலாம் என்பது உண்மையா?

ப: கப்பல், விமானம், ரெயில் இவற்றை இயக்குவது எல்லாம் சாதாரணம். அணுச் சக்திக்கு இது மிகவும் அற்பானது என்றுகூடச் சொல்லலாம். அணுவின் சக்திக்கு இணையான சக்தி எதுவுமே இல்லை. அந்தச் சக்தியால் சீதோஷ்ண நிலையையே மாற்றலாம். மலை யைப் பிளந்து பள்ளத்தாக்காக மாற்றலாம். சகாரா பாலை வனத்தை ஜீவ நதிகள் பாய்கின்ற பசும் வயல்காடுகளாக்கலாம். அதைப் பயன்படுத்திக் கொள்ள ஆக்க முறையில் மனிதன் முயன் றால் இந்த வையகத்தையே வைகுந்தமாக்கிவிடலாம்.

கே. எஸ். நாராயணன், லக்ஷ்மிபுரம்

கே: எனக்குப் பதினைந்து வயது தான் ஆகிறது. ஆனால் தலைமயிர் பாதிக்குமேல் நரைத்துவிட்டது. இதற்குக் காரணம் என்ன? அதற்கு ஏதாவது சிறந்த மருந்து இருக்கிறதா?

ப: நரம்புத் தளர்ச்சி, சோர்வு, சத்தில்லாத உணவு, பித்த மிகுதி இவைகளால் இளம் வயதிலேயே மயிர் நரைத்துவிடலாம் என்று பல நிபுணர்கள் அபிப்பிராயப்படு கிறார்கள். 'தைராய்ட் க்ளாண்ட்' என்ற தொண்டைச் சுரப்பி அதிக வேகமாக வேலை செய்வதாலும் மயிர் நரைப்பதுண்டாம். அந்தச் சுரப்பி ஒழுங்குபடும்படிச் சிகிச்சை செய்துகொண்டால் நரை நீங்கி விடுகிறதாம். வைட்டமின்-பி. காம்ப்ளக்ஸ் உள்ள உணவையோ டானிக்கையோ சாப்பிட்டு வந் தாலும் இந்த நரை நீங்கக்கூடும் என்று அமெரிக்க நிபுணர்கள் கருதுகிறார்கள்.

எம். ராஜு, அருப்புக்கோட்டை

கே: ஒரு பத்திரிகையின் ஆசி ரியருக்கு முக்கியமாக இருக்க வேண்டிய தகுதி என்ன?

ப: கண்ணியம்தான். கையிலே பேனாவும் எதிரிலே காகிதமும் இருக்கிறது என்று பிறர் எழுதிய வற்றைப் படித்துத் தம் சொந்தச் சரக்குபோல் எழுதி ஏமாற்றாமல் இருப்பதுதான் நேர்மை. நேர்மை தான் கண்ணியத்துக்கு அஸ்தி வாரம்.

பு. அரங்கசாமி, காரைக்குடி

கே: பிரசங்கிகளை மூன்று வகையினராகப் பிரிக்கலாம் என்று ஒரு மேல் நாட்டு நிபுணர் எழுதியதைப் படித்தேன். அதை நீங்கள் ஏன் குறிப்பிடவில்லை?

ப: நானும் படித்திருக்கிறேன். மனிதர்களின் சரளமான சுபாவத்தையும் நகைச் சுவையையும் தூண்டுகிற பிரசங்கிகள் ஒரு வகை. தர்க்க ரீதியாகவும் அறிவுக்கு விருந்தாகவும் பேசுகிற பிரசங்கிகள் இரண்டாவது வகை. மூன்றாவது வகையினர் அனல் கக்கி, இடி முழங்குவதுபோல் பேசுகிறவர்கள். அநேகமாக இந்த மூன்று பிரிவுகளுக்குள் எல்லாப் பிரசங்கிகளும் அடங்கிவிடுகிறார்கள் என்பது உண்மை. ஆனால் தேர்ந்த பிரசங்கி எப்படி இருப்பான் என்றால் இந்த மூன்று வகைப் பிரசங்கங்களும் செய்ய வல்லவனாக இருப்பான்.

நா. சு. கிருஷ்ணமூர்த்தி,
கள்ளக்குறிச்சி

கே: மனச்சாட்சி என்பது என்ன?

ப: அது வயிற்றுப் பசிக்கு முன்னே வைத்திருக்கும் நிலைக் கண்ணாடி.

மா. ரா. செல்லக்குட்டி, மாதம்பட்டி

கே: உணவு எப்படி இருக்க வேண்டும்?

ப: ருசியாக இருக்கவேண்டும்; ஆரோக்கியம் தருவதாகவும் இருக்க வேண்டும்.

பெரிய நல்லையா, மணக்காடு

கே: சினிமா நல்லதா?

ப: நல்ல படமாக இருந்தால் நல்லதுதான். ஆயிரம் ரூபாய் செலவழித்தாலும் காணமுடியாத சிறந்த காட்சிகளை ஆறணாச் செலவில் பார்த்துத் தெரிந்துகொண்டு விடலாமே! ஆயிரமாயிரம் வருஷங்களுக்கு முன்பு தோன்றிய கதையை இன்று நடப்பதுபோல், நேரில் பார்ப்பதுபோல் பார்த்து விடலாமே!

பி. ஏ. வீரமணி, வால்பாறை

கே: விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அகப்படாத விஷயம் எது?

ப: பல இருக்கின்றன. அவற்றில் ஒன்று பேனையும் மூட்டைப் பூச்சியையும் அறவே ஒழிக்க முடியாமல் போனது. மனிதன் தோன்றியதற்கு முன்பே இவை உலகில் தோன்றிவிட்டனவாம். வருஷந்தோறும் புதிது புதிதாக இவற்றைக் கொல்லக் கொடிய மருந்துகள் தயாராகின்றன. ஆனால் அவற்றை அடியோடு இல்லாமல் ஒழிக்க எந்த ஆராய்ச்சியும் இன்று வரையில் பயன்படவில்லையே!

'தவளைவாணன்' கீழ்ப்பாக்கம்,
சென்னை-10

கே: தங்களைப் பற்றித் தமிழ்வாணன் எழுதி யிருந்ததைப் பார்த்தீர்களா? உங்களையும் அகிலனையும் தாக்கி எழுதியிருக்கிறாரே. சூடான பதிலைத் தங்களிடமிருந்து எதிர் பார்க்கலாமா!

ப: நான் அதைப் பார்த்தேன். வருத்தப்பட்டேன். எங்களைத் தாக்கியிருப்பதைக் கண்டு வருந்தவில்லை. தாக்குதலிலேயே வளர்ச்சி காண்கிறவர்கள் நாங்கள். ஆனால் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் என்னும் ஒருவர் தவறும் அறியாமையும் நிறைந்த பதிலாகத் தருகிறாரே என்றுதான் வருந்தினேன். திருச்சிக் கூட்டம் தம் பத்திரிகைக்கு எதிர்ப்பு மகாநாடு என்று அவர் எப்படி அறிந்தாரோ, நமக்குத் தெரியாது. அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த உள்ளூர், வெளியூர் எழுத்தாளர்கள் அத்தனை பேரையும் கேட்டால் அப்படியில்லை என்பது தெரியும். வளரும் எழுத்தாளர்கள் குழந்தைகளையும் சரி, மாணவர்களையும் சரி, இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி ஏமாற்றாத எழுத்தாளர்கள். பிறருடையதைத் தம்முடையதுபோல் எடுத்து அறிவுத் தானம் வழங்காத வெள்ளை உள்ளத்தவர்கள். படித்துப் பட்டம் பெற்றும் பதவிகாக, அடக்கமாகப் பேசி, எழுதி வருகிறவர்கள். எத்தனையோ நல்ல லட்சியம் உள்ளவர்கள் அவர்கள். எதிர்ப்பு மகாநாடு கூட்டுவது

அவர்கள் நோக்கமுமல்ல; கூட்டவு மில்லை. நானும் சரி, திரு அகில னும் சரி, பலகாலமாக எழுதி வருகிறோம். சிறுவர்களுக்கும் எழுது கிறோம்; பெரியவர்களுக்கும் எழுது கிறோம். அவ்வப்போதும் தொடர்ச்சியாகவும் எழுதுகிறோம். இலக்கியத்தில் காதலும் சிருங்கார மும் தள்ளுபடியல்ல. பார்க்கப் போனால் சிருங்கார ரஸம் முக்கிய மானது என்று கூறவேண்டும். பெரியவர்களுக்காக எழுதும் கதை கள் சிலவற்றில் காதல் கதையும் உண்டு. ஆண் - பெண் தத்துவங் களைப்பற்றிக் கதையின் அளவுக்கு ஏற்ப அமைப்பதும் உண்டு. இலக்கி யத்தில் அதற்குரிய பங்கை அந்தப் பகுதியை மட்டும் தனியே பிரித் துப் பார்த்து முடிவு கட்ட முடி யாது; கூடாது. அது சிருங்கார மான விஷயமா, கீழ்த்தரமான விஷயமா என்பதைக் கற்றறிந்த வர்களே முடிவு கட்டத் தகுந்தவர் கள். நாங்கள் எழுதிய நாவல்களுக் கும் கதைகளுக்கும் அநேகமாக எல் லாப் பத்திரிகைகளிலும் மதிப் புரைகள் வெளியாகியிருக்கின்றன. இப்படி யாரும் அந்த மதிப்புரைக ளில் குறை காணவில்லை. அவர்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் புலப் படாத இந்தக் கீழ்த்தரமான விஷ யத்தை இவர் எப்படித் தேடிக் கண்டு பிடித்தாரோ, தெரிய வில்லை! அப்படியே சில பகுதிகள் இருக்கிறது என்று வைத்துக்கொண் டாலும், கீழ்த்தரமான விஷயங் களின் உலையிலேயே உழலும் ஒரு வர் இப்படிப் பிறரைப் பார்த்துச் சுத்தம் பேசுவது நகைப்புக்கிட மானது. நாவிலே கலைத் தேவியின் அருள் நடமிடும் பெரிய கவிஞர் கள், கலைஞர்கள் எல்லாரும்கூட அவையடக்கமும் நாவடக்கமும் கொண்டு பிறருக்கு வழிகாட்டிக ளாய், நிறைகுடமாய் விளங்கினர் கள்; விளங்குகிறார்கள். ஆனால் சில அரை குறை மேதாவிகள் இறந்து போன சிறந்த ஆசிரியர்களையும் இருக்கின்ற சில நல்ல எழுத்தாளர் களையும் வலுவிலே இழிவுபடுத்த முன் வருவது வான்கோழி மயில் என்று தன்னை எண்ணிக்கொண்டு ஆடுகிற கதையைப்போலத்தான் இருக்கிறது.

எம். சண்முகம், திருவாரூர்.

கே: ஹைட்ரோ எலக்டிரிக் பவர் ஸ்டேஷன், தெர்மல் பவர் ஸ்டே ஷன் இரண்டுக்கும் என்ன பொருள்?

ப: தண்ணீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையம் முத லில் குறிப்பிட்டது. இரண்டாவது குறிப்பிட்டது எரிபொருளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலை யம் என்பது.

பி. சுப்பராயலு, திண்டுக்கல்.

கே: நீதியும் நியாயமும் ஒன்றா அல்லது வேறு வேறா?

ப: வேறு வேறு; நீதியைக் கொண்டு நியாயம் வழங்கப் படுகிறது.

கே: ராஜாஜியும் காமராஜும் தேர்தலுக்கு நின்றால் நீங்கள் யாருக்கு ஓட்டுப் போடுவீர்கள்?

ப: காமராஜுக்குத்தான். ராஜா ஜிக்கு இனித் தேர்தல் அவசிய மில்லை. சிறுவர்களைப் போலவே வயதானவர்களும் அரசியலில் கலக் வேண்டாம் என்றுதான் பலர் எண்ணுகிறார்கள். சிறுவர்கள் அரசி யலைக் கற்பதோடு நிற்க வேண்டும். மிகப் பெரியவர்கள் அரசியலில் கலக்காமல் அரசியல் வாதிகளுக்குப் போதிப்பதோடு (வழிகாட்டுவ தோடு) நிற்கவேண்டும். ராஜாஜி தேர்தலில் நின்றால் நமக்கு அவர் அருமை தெரிவதில்லை.

எம். பழனிமுத்து, மணப்பாறை.

கே: நல்லவன்கூடப் பணம் சேர்ந்துவிட்டால் மாறிவிடுவான் என்பது உண்மையா? நல்லவனை எப்படி எதிலிருந்து அறியலாம்?

ப: ஒன்றுக்கு முக்கால் உண்மை. பணம் குவிந்த பின்னரும் நல்லவர் நல்லவராகவே விளங்கி வருவதை நான் கண்டிருக்கிறேன். நல்லவ னிடம் பணத்தைக் கொடுத்துப் பார்த்து அறிய முடியும் என நான் நினைக்கவில்லை. அதிகாரத்தைக் கொடுத்துப் பார்த்தால் தெரிந்து கொண்டு விடலாம்.

கதை: 'ஆர்வி' கடற் புலி சித்திரம்: 6.




ஹஹ்ஹஹஹ்ஹா
என்ன சிரிப்பு! உனக்கு உயிரின் மீது ஆசையில்லையா! கலத்தோடு கடலில் மூழ்கப் போகிறாயா?
இப்பொழுது எங்கே- நீ கொள்ளையிட்ட பொன்னும் மணியும்! அவைகளை எடுத்துக் கொள்ளாமல் போகிறாயே!
முதலில் என்னை விடு! பிறகு நாம் உயிரோடு இருந்தால் எல்லாம் பேசிக்கொள்ளலாம்.
படகில் ஏறிக் கொள் முதலில்!
படகைப் பிடித்து இளவரசியை ஏற்றி விட்டு, தானும் ஏறிக் கொள்கிறான். கடலில் குதித்த மாலுமிகள் கட்டு மரங்களிலும், படகுகளிலும் ஏறி, நாலாபக்கங்களிலும் சிதறிப் போகின்றனர்.
அதோ! மரக்கலம் மூழ்குகிறது!

(தொடரும்)

# ஹம்பஞ்சிஏக்டால்கே!



ஜமீன்தார் மகன்

குழந்தைகளுக்காக முதல் முதல் எடுத்த ஹிந்திப் படம் இது.

இந்தப் படத்தை எடுத்தவர்களை ஒரே ஒரு காரணத்துக்காக அவசியம் பாராட்ட வேண்டும் என்று வெளியில் வந்ததுமே எனக்குத் தோன்றிற்று. அதாவது படத்தைப் பன்னிரண்டாயிரம் அடிக்குள்ளேயே எடுத்திருக்கிறார்களே, அதற்காகத்தான்.

ஏ. வி. எம். அவர்கள் பல நல்ல படங்களை எடுத்துப் புகழ் பெற்றவர். இது அவருடைய ஸ்டுடியோவில் எடுக்கப்பட்டிருப்பதாலும் பச்சிளம் பாலர்கள் நடிக்கும் படமாக இருப்பதாலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் அமைந்திருக்கும் என்று எண்ணினேன். ஆனால்,—

ஓரளவு எனக்கு ஏமாற்றம்தான்.

குழந்தைகளுக்கான புதிய கதைகள் கிடைப்பது அத்தனை சுலபமல்ல என்பதை இந்தப் படத்தைப் பார்த்தாலே அறியலாம்.

ஒரு ஜமீன்தார். அவருக்குத் தம் மகன் ஊரில் உள்ள சாதாரணப் பிள்ளைகளோடு பழகுவது பிடிக்கவில்லை. பையனோ மற்றவர்களுடன் சேர்ந்து சமூகசேவை செய்வதிலும், நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதிலும் நாட்டம் உள்ளவனாக இருக்கிறான். இதைத் தடுக்க ஜமீன்தார் தம் மகனுக்கு ஒரு புதிய வாத்தியாரை அமர்த்துகிறார். ஆனால் அவனுக்குப் பதில் அவனுடைய பொடி நண்பன் ஒருவன் தினம் தினம் வந்து ஒருவரும் அறியாமல் படித்துக்கொண்டிருக்கிறான். ஜமீன்தார் பையன் நாடகத்தில் கலந்துகொண்டிருக்கிறான். வாத்தியார் சம்பளம் வாங்கும் அன்று உண்மை தெரிகிறது. ஜமீன்தார் பையனை அழைத்துவரப் போகிறார். ஆனால் போன இடத்தில் அவர் அந்த நாடகத்துக்கே தலைமை வகிக்கும்படி ஆகிவிடுகிறது. அந்த நாடகத்தில் நடிக்க இருந்த நந்து என்பவன் ஏணியிலிருந்து கீழே விழுந்து கையை முறித்துக் கொள்வதால், ஜமீன்தார் பையன் முக்கிய பாகத்தில் நடிக்கிறான். நந்து பேப்பர் விற்கும் சிறுவன்; ஏழை, மறுநாள் ஜமீன்தார் மகனைத் தேடிக் கொண்டு அங்கே போனபோது அவர் மனம் மாறுகிறது. சிறு வயதினரிடம் பணக்காரர், ஏழை என்ற வித்தியாசம் கிடையாது. அவர்கள் அனைவரும் ஒரேகிளைப் பறவைகள் என்ற உண்மையை உணருகிறார்.

இதுதான் கதை.

உள்ளத்தைத் தொடுகின்ற சம்பவமோ, குழந்தைகளைத் துள்ளிக் குதிக்க வைக்கக் கூடிய வேடிக்கை நிகழ்ச்சிகளோ கதையில் இல்லாதது குறைதான்.

ஆனால் குழந்தை நடிகர்கள் அனைவரும் கொடுத்த பாகத்தைக் குறைவின்றிச் செய்திருக்கிறார்கள். அதை நம் குழந்தைகள் அனைவரும் பார்த்து மகிழவேண்டியதுதான்.

—வி. ஆர். பி.



சட்பட்

# எழுத்தாளன் ஆகவேண்டுமா?

'ஆர்வி'

எழுத்தாளனுக வேண்டுமா என்ருல், உடனே ஏதேதோ எண்ணி மலேத்து விடாதீர்கள். பத்திரிகைகளுக்கு எழுதி, நல்ல எழுத்து என்று பாராட்டப் படுவதை மட்டுமே நான் குறிப்பிடுகிறேன்.

நமக்கு இயற்கையான ஆசை ஒன்று உண்டு. நம்முடைய மகிழ்ச்சியையோ, துயரத்தையோ, நமக்கு நேர்ந்த விசித்திரமான அநுபவத்தையோ பிறருக்குச் சொல்கிற ஆசை அநேகமாக நம் எல்லாருக்குமே இயற்கையாக இருக்கிறது.

நம் அருகே இருப்பவர்கள் என்ருல் இதை வாயாலேயே விவரித்துச் சொல்லி விடலாம். ஆனல் பலபேருக்குச் சொல்ல வேண்டும் என்ருல் என்ன செய்வது?

அதற்காகத்தான் நாம் எழுத வேண்டும் என்று ஆசைப்படுகிருேம். ஒரு சிலர் மட்டும் நாம் சொல்வதை, நம்முடைய திறமையை அறிந்து கொண்டால் நமக்குத் திருப்தி ஏற்படுவதில்லே. பலர் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிருேம். பலர் மகிழ்ச்சியில்தானே நமக்குப் புகழ் இருக்கிறது? இந்த ஆசை சகஜமாக ஒவ்வொருவருக்குமே இருக்கிறது. ஆனல் எல்லாருமே எழுத முன்வருவதில்லே. சிலர் தான் முன்வருகிருர்கள். அப்படி வருகிறவர்களிலும் எல்லாருமே சிறப்பாக எழுதி வெற்றி பெறுவதில்லே. அதிலும் இரண்டு அல்லது மூன்று பேர்தான் வெற்றி பெறுகிருர்கள். அந்த இரண்டு மூன்று பேர்களும் எப்போதுமே வெற்றி பெற்றுவிடுவதில்லே. சில சந்தர்ப்பங்களில்தான் அவர்களுக்கும் அந்த ஆசை நிறைவேறுகிறது.

ஆம்; எழுதுவது எல்லாமே நன்ருக இருந்துவிடும் என்று சொல்ல முடியாது. அதேபோல எல்லாரும் எழுதிவிடுவதென்பதும் முடியாதுதான்.

ஆனல் ஆரம்ப நிலேயில் சாதாரணமாகப்பத்திரிகைகளுக்கு எழுத விரும்பும் ஒருவனுக்கு இந்தப் பயம் எல்லாம் வேண்டியதில்லே. நீந்துவதற்குக் கற்றுக்கொள்வது மாதிரித்தான் இதுவும். கற்றுக்கொண்டு விட்டால், குளம், ஆறு, கடல் என்று பழகப் பழக நீந்தலாம்.

பத்திரிகைகளுக்கு எழுதுவது என்ருல் எதை எழுதுவது?

இதுதான் பலருக்குப் பிடிபடாத பெரிய புதிராக இருக்கிறது.

எந்தப் பத்திரிகாசிரியரும் சரிதான். நல்ல விஷயமாகக் கிடைக்காதா என்று கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டுதான் இருக்கிருர். இப்பொழுது படிப்பவர்களும் அதிகம்; பத்திரிகைகளும் அதிகம்தான். ஆனல் நல்ல சரக்குகளாகக் கிடைப்பதுதான் அரிதாக இருக்கிறது. அதனல் எந்த ஆசிரியரும் நல்ல விஷயமாக எழுதியனுப்பினல் அதைப் பயன்படுத்தாமல் இருக்க மாட்டார். நீங்கள் எழுதியனுப்புவது நல்ல விஷயமாக இருக்கலாம். ஆனல் அனுப்பிய மறுநாளே அது திரும்பிவந்துவிடுகிறது என்ருல் அதற்கு எத்தனேயோ காரணங்கள் இருக்கும்.

ஒவ்வொரு பத்திரிகையும் தனக்கென்று ஓர் அளவும், தரமும் வைத்துக்கொண்டிருக்கிறது. அதை ஒட்டித்தான் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் உங்களுடைய எழுத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிருர். அது அவருடைய தேவையை ஒட்டி இல்லாவிட்டால் திருப்பித்தான் அனுப்புவார்.

உங்களுக்குத் தெரிந்த ஒரு விஷயத்தை நீங்கள் பிறருக்குச் சொல்ல விரும்புகிறீர்கள். அல்லது உங்கள் கற்பனேத் திறத்தால்

புனைந்த கதையைப் பிறர் படித்து ரசிக்க எண்ணுகிறீர்கள். அப்படியானால் அதை எப்படிச் செய்வது? இதுதான் முதல் கேள்வி. நீங்கள் சொல்வதைப் பிறர் கேட்டு ரசிப்பதைப் போலவே படித்து ரசிக்க வேண்டும். விஷயம் சுவாரஸ்யமாக இருந்தாலும் அதைச் சொல்லுகிற முறையில்தான் இருக்கிறது பிறர் ரசிப்பது. அதேபோல் எழுதுகின்ற முறையில்தான் ருசியை ஊட்ட முடியும்.

இந்தக் காலத்திலே அநேகமாக இளம் வயதினருக்குக்கூட நல்ல தமிழ் நடை கைகூடி வந்திருக்கிறது. இனிய தமிழில் எழுதுகிறார்கள். நடை என்பது என்ன? நம்முடைய கற்பனைகளுக்கு, கருத்துக்களுக்கு அது ஒரு வாகனம். வாகனம் உறுதியாகவும் அழகாகவும் இருப்பது நமக்கு ஒரு வாய்ப்புத்தானே!

நடை நன்றாக, அழகாக இருந்தால் போதுமா? விஷயமும் சுவாரஸ்யமாக இருக்க வேண்டும். இருந்தால் உங்கள் திறமையினால் பிறருக்கும் சுவாரஸ்யம் உண்டாக்கும்படிச் செய்ய முடியும்.

திறமை என்பது என்ன? எப்படிப் பெருக்கிக் கொள்வது? உங்களுக்குச் சுவையாக இருப்பதெல்லாம் மற்றவர்களுக்கும் சுவையாகப்படும் என்று சொல்ல முடியாது. ஆனால் அவர்களுக்கு அப்படிப் படும்படிச் செய்வது இருக்கிறதே, அதுதான் திறமை என்பது. இந்தத் திறமை யாருக்கு அதிகமாய் இருக்கிறதோ அவர்களுடைய எழுத்துக்கு அதிக மதிப்பு ஏற்படுகிறது. 'சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது போல் எழுத எழுதத்தான் திறமை பெருகுகிறது. பல எழுத்துக்களைப் படிக்கப் படிக்கத்தான் நம் ருசியும் உருவாகிறது. அதன் பிறகே சுவையான விஷயம் எது, அதை எப்படிச் சொன்னால் சுவையாக இருக்கும் என்பதெல்லாம் எழுத எழுதத்தான் நமக்கு அத்துபடியாகும்.

ஒரு நிகழ்ச்சியைப் பலபேர் ஒரே சமயத்தில் பார்க்கிறார்கள். ஆனால் அத்தனை பேரையும் என்ன நடந்தது என்று கேட்டுப் பாருங்கள். ஒவ்வொருவரும் அதே நிகழ்ச்சியை ஒவ்வொரு விதமாகத்தான் சொல்வார்கள். பார்க்கின்ற கோணம், மனசில் வாங்கிக் கொள்கின்ற விதம், மறுபடியும் அதை எடுத்துக் கூறுகிற முறை, மொழித் தேர்ச்சி இவ்வளவையும் பொறுத்து அந்த விதங்கள் வேறுபடுகின்றன.

ஓர் இடத்தில் ஒரு வித்தையாடி ஜாலவித்தை செய்து காட்டுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அதை அப்படியே வந்து சொல்வது சாதாரணச் செய்தி. அதைப் பரபரப்புக் கொள்ளும்படிச் சொன்னாலும், பிரமிப்புக் கொள்ளும்படிச் சொன்னாலும் வரிசைக் கிரமமாகச் சொன்னாலும் அது செய்திதான். ''ஒரு பையனை அந்தரத்தில் படுக்க வைத்தான், பார்!'' என்று பிறர் ஆவலைத் தூண்டும் வகையில் கூறினாலும் அது கதையாகாது.

ஆனால் அவனையும் அந்தப் பையனையும் வைத்து அதிலிருந்து ஒரு சோகக் கதையையோ, உருக்கமான கதையையோ உருவாக்கி விட முடியும்.

உதாரணமாக, சுருக்கமாகப் பார்ப்போம்.

பையன் ஏழை. பள்ளிப் படிப்பு முழுவதும் படிக்க வழியில்லை. வேலை தேடித் திரிந்தான். வேலை கிடைக்கவில்லை. சாப்பிட்டு மூன்று நாள் ஆயிற்று. பிச்சை ஏற்பதை அவன் வெறுத்தான். ஆனால் வேலை கிடைக்கவில்லையே!

அங்கே ஓர் இடத்தில் கூட்டமாக இருந்தது. வித்தையாடியைச் சுற்றித்தான். வித்தையாடியின் துணியிலே பழைய புதிய நாணயங்களும் அவற்றோடு அவன் விற்கும் மை டப்பாக்களும் கிடந்தன. இப்படி ஒரு தொழிலையாவது கற்றிருக்கக் கூடாதா என்று எண்ணியது பையன் நெஞ்சம். அப்போது விதையாடி, ''கூட்டத்திலிருந்து யாராவது ஒரு பையன் வாருங்கள்! சும்மா பயப்படாமல் வாருங்கள்!'' என்று அழைத்தான். ஒருவரும் முன்வரவில்லை. ஆனால் இந்தப் பையன் தைரியமாகப் போய் நின்றான். பசியால் தலை சுற்றியது. கண்கள் இருண்டன, கால்கள் தள்

ளாடின. ஆயினும் போய் நின்ருன்.

வித்தையாடி தன் வித்தையைத் தொடங்கினுன். ஆனுல் பையன் பசிக்களைப்பால் சோர்ந்து விழுந்தான். மை டப்பாக்களுக்கு மேலேயே விழுந்தும் அவன் களைப்பும் நீங்கவில்லை; மயக்கமும் மாறவில்லை. மை டப்பாக்களுக்கு அத்தனை மகிமை; இதை வைத்துக்கொண்டு முன்னும் பின்னுமாகச் சிலவற்றைச் சேர்த்து ஓர் உருக்கமான நிகழ்ச்சியை உருவாக்கினுல் அது கதையாகி விடுகிறது. எல்லாம் நடந்த, நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு நடந்ததுபோல் நம் உள்ளத்தைக் கவரச் செய்வதில்தான் கதையின் வெற்றி இருக்கிறது.

நான் கூறிய இதே பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் வைத்துக்கொண்டு இதைவிடப் பிரமாதமான கதைகளை வேறு சிலரால் உருவாக்கிவிட முடியும். கதையின் அடிப்படைக் கருத்தையும் அதற்கேற்ற முடிவையும் கொடுத்து விட்டால் கருத்து உயர உயர, கதையின் தரமும் உயர்ந்து உருவாகி விடுகிறது.

எல்லாமே கற்பனையால் உருவாக்கிவிட முடியாது. எல்லாமே நடந்த சம்பவங்களாகப் பிணைத்து விடவும் முடியாது. எல்லாமே கற்பனையாக இருந்தால் அதற்கு உயிர் ஆதாரம் இருக்காது. எல்லாமே நடந்ததாக இருந்தால் அது கதையாகாது; வெறும் செய்தியாக இருக்கும்.

எனவே இரண்டையும் பிணைத்து, ஒரு புதிய சிருஷ்டியை உருவாக்குவதே கலையுணர்வு.

''இது நிஜமாக நடந்த கதை!'' என்று யாராவது ஒரு பத்திரிகாசிரியரிடம் சொன்னுல் உடனே அவர் அதைப் பிரசுரித்து விடுவார் என்று பலர் நினைக்கிருர்கள்.

இந்த எண்ணம் தவறு. உண்மையில் நடந்தவை கட்டுக்கதைகளை விட விசித்திரமாக இருக்கும். ஆங்கிலத்தில் இதற்கு ஒரு பழமொழி கூட உண்டு. 'Truth is Stranger than fiction'.

அதனுல் உண்மையில் நடந்தது என்று சொல்லி விட்டால், அது பிரசுரிக்கத் தகுந்த கதையாகி விடுமா? ஆகாது. அதை 'ஒரு நிருபர்' என்று கையெழுத்திட்டு தினசரிப் பத்திரிகைகளுக்கு வேண்டுமானுல் செய்தியாக அனுப்பலாம். அவர்கள்கூட புதிய செய்திகளாக இருந்தால்தான் பிரசுரிப்பார்கள். பழைய செய்திகளைச் சாவகாசமாக வெளியிட மாட்டார்கள்.

கதை என்ருல், அதற்கு ஒரு கருப்பொருள் இருக்க வேண்டும். அந்தக் கருப் பொருள்தான் கதைக்கு உயிர். அதைச் சுற்றித் தான் கதை உருவாக வேண்டும். கதையில் எந்தப் பகுதி வந்தாலும் அது அந்தக் கருப்பொருளுக்கு உதவுவதாகவே அமையவேண்டும். நம்முடைய உடம்பிலே நமக்கு எந்த உறுப்பு அவசியமில்லாதது? ஏதாவது ஒன்றைச் சொல்லமுடியுமா? நகமும் தலைமுடியும்கூட நமது உடலுக்கு வேண்டாதவையல்ல. நம் உயிர் இயங்குவதற்கும் செயல்படுவதற்கும் எந்தச் சிறு பகுதியும் அதற்கு ஏற்ற முறையில் அவசியமாக இருக்கிறது. அதேபோலத் தான் கதையின் பகுதிகள். ஒவ்வொரு சொல்லும் கதைப் பொருளுக்கு ஊட்டம் கொடுப்பதாக அமைய வேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் பேச்சும் அசைவும்கூட கதையை ஒட்டியதாக, ஒரே கட்டுக்கோப்பானதாக இருக்க வேண்டும். ஒரு சொல்லைப் பெயர்த்து விட்டால்கூட ஒரு சுவரிலிருந்து ஒரு கல்லைப் பெயர்த்தது போல ஆகிவிடுமே என்று தோன்ற வேண்டும்.

முன்னே சொன்ன கதையில் வித்தையாடி கல்யாணம் என்று செய்து கொண்டு, ஒரு பிள்ளையையும் பெற்றுவிட்டு, மனைவிக்குத் தெரியாமல் ஓடிப் போனவனுகக் கூட இருக்கலாம். நாடோடியாகி, ஒரு வித்தையாடியிடம் போய்ப் பயின்று அவனே இப்போது வித்தையாடியாக இருக்கலாம்; நமக்கு அவனுடைய பழம் கதையெல்லாம் அவசியமல்ல. ஆனுல் ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டு,

பொறுப்பு இல்லாமல் ஓடிப் போனுனே, அந்தப் பிள்ளைதான் இப்போது மயக்கமடைந்து விழுந்த வன் என்று கதை உருவாக வேண்டியிருந்தால் அப்போது அந்தப் பழங்கதை அவசியமாகி விடுகிறது.

வித்தையாடி துணி விரித்திருந் ததை முதலிலேயே நாம் சொல்லி யிருக்கிறோம். அதிலே என்ன வெல்லாம் கிடந்தன என்பதையும் வாசகர்களுக்கு ஒவ்வொன்ருக அறி முகப்படுத்தினேம். அதிலே புதிய பழைய நாணயங்கள் இருந்தன; கூடவே அவன் விற்பதற்காக வைத் திருந்த மைடப்பாக்கள் கிடந்தன. இதை எதற்காக நாம் முதலில் விவரித்தோம். காரணமில்லாமலா? அல்லது தத்ரூபமாக வர்ணிப்பதற் காக மட்டுமா? அல்ல; அவன் மை விற்பதாகப் பெருமை யடித்துக் கொண்டானே, அந்த மை, அந்தப் பையனுடைய பசியையோ, மயக் கத்தையோ மாற்றுவதற்குச் சக்தி யற்ற மை என்பதைப் பின்னுல் வாசகர்களுக்கு எடுத்துக்காட்டத் தான்! வேடிக்கை பார்த்த கூட்டத் துக்கு அந்த மையைப்பற்றிக் கேட்கவே தெரியாமல் அல்லவா போய்விட்டது! ஆனுல் நீங்கள் அதை எடுத்துக்காட்டும்போது அத்தனை வாசகர்களும் அந்தக் கூட் டத்தின் மதியீனத்தை உணர்ந்து கொண்டுவிடுகிருர்கள்.

கதை சொன்னுல் அதன் மூலம் நீங்கள் உங்கள் மனசுக்குப் படுகிற ஓர் உண்மையை, உங்களுக்குப் படுகிற விளக்கத்தோடு தருவது தான் உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். கதையினுள்ளே உங் கள் உள்ளக் கருத்து மறைந்திருக்க வேண்டும். நீங்கள் கதையில் ஒரு பாத்திரமல்ல. உங்களுடைய பாத் திரங்கள்தான் கதையிலே வர வேண்டும். நீங்கள் திடுமென்று குறுக்கிட்டு, ''ஆகையால் இதி லிருந்து உங்களுக்கு என்ன தெரி கிறது..'' என்று நீதிகூற வரக் கூடாது.

நாம் வாயினுல் கதை சொல்லும் போது, அல்லது நடந்த ஒரு சம்பவத்தை விளக்கும்போது எப் படித் தொடங்குகிருேம். ''ஒரு ஊரிலே ஒருவர் இருந்தார்'' என் கிற மாதிரிதான் முதலிலிருந்து தொடங்குகிருேம். அப்பொழுது தான் கேட்கிறவர்களுக்குத் தெளி வாக விளங்கும். ஆனுல் எழுத்தில் அந்தக் கட்டாயமில்லை. கதையைச் சொல்வது என்பது வேறு; எழுது வது என்பது வேறு. அது காதால் கேட்பது; இது கண்ணுல் பார்த் துப் படிப்பது. எனவே அந்த அள வுக்குச் சொல்லுகிற முறையில் மாறுதல் இருக்கலாம். எல்லாவற் றையும் ஒரே மாதிரியாகத் தொடங்கிச் சொன்னுல் சொல்ல வும் அலுத்துப் போகும்; கேட்க வும் அலுத்துப் போகும், அதை முன்னிட்டுப் புதிய முறையில் மாறுதல் இருக்கத்தான் வேண் டும். அதைத்தான் உத்தி என்று குறிப்பிடுகிருேம். ஆங்கிலத்தில் இதை 'டெக்னிக்' என்கிருர்கள். கதையை நடுவில் ஏதாவது ஒரு புதிய இடத்திலிருந்து, ஒரு புதிய கோணத்திலிருந்து பார்ப்பது போல், சொல்லி நடத்துவதே இப் பொழுதுள்ள நவீன முறை. '''டமடம் டமடம்..' என்று வித்தையாடியின் கொட்டுக் கொட்டியது. கூட்டம் கூடியது'' என்று கதையைத் தொடங்கி, பிறகு முன்பின் நடந்தவற்றைப் பொருத்தமாகப் புனையலாம். ''ஒரு பையன்; ஏழை; இப்படி நடந்து போனுன். ஒரு வித்தை யாடி அங்கே இருந்தான்..'' என்று கதையைத் தொடங்குவதை விட இது புது மாதிரியாக இருப்ப தோடு, சுவையாகவும் இருக் கிறது.

ஆகவே ஒரு கதையை எழுது வதற்கு முன்னுல் அதை எப்படித் தொடங்குவது, யார் அதைச் சொல்வதுபோல் விவரிப்பது என் பனவற்றைப் பலமுறை எண்ணிப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

என்னுடைய அநுபவத்தில் பல எழுத்தாளர்கள் கதையையெல் லாம் நன்ருக உருவாக்கித் தொடங்கிச் சொல்லிக்கொண்டும் போய்விடுகிருர்கள். ஆனுல் அதை எங்கே, எப்படி முடிக்கவேண்டும் என்பது புரியாமல் முடிக்கிருர்கள்.

ஒரு கதை சோபிப்பது அதன் முடிவினால்தான் என்பதை நாம் அறிய வேண்டும். கடைசிவரியைப் படித்த பிறகுதான் நம் மனத்தில் கதையைப் பற்றிய அபிப்பிராயம் வலுவடைகிறது. அந்த எண்ணத்தை என்றும் நினைவில் வைத்திருக்கும்படி முடிப்பதே நம்முடைய லட்சியமாக இருக்க வேண்டும். கதையின் கருப் பொருளின் உயிர்த் துடிப்பை அந்தக் கடைசி வரியிலே நாம் கற்பனையின் வன்மையினால் காட்ட வேண்டும். அந்தத் துடிப்புத்தான் வாசகர்களுடைய இதயத்தை நெகிழச் செய்வது. அது அழுத்தமாகப் பிறர் மனத்தில் பதியத்தக்க விதத்தில் அமைந்துவிட்டால், உங்கள் எழுத்துச் சிறந்து விடுகிறது.

ஆனால் திடீரென்று முடிவு அத்தனை துடிப்போடு முடிந்துவிடும் என்று எண்ணாதீர்கள்.

கதையைத் தொடங்கும்போதே ஒவ்வொரு வரியும் அடுத்த வரிக்குத் தொடர்புள்ளதாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அடுத்த வரி என்ன, அடுத்த நிகழ்ச்சி என்ன, கதையின் போக்கு எப்படி என்று வாசகர்கள் உங்களோடு தொடர்ந்து வரும்படியான ஆவலைக் கொடுத்துக் கொண்டே போகவேண்டும். இந்த ஆவலைத்தான் ஆங்கிலத்தில் 'ஸஸ்பென்ஸ்' என்கிறார்கள். கதைக்கு இந்த ஆவல் என்கிற அம்சம் இல்லாவிட்டால் கடுகு தாளிக்காத குழம்பு போலத்தான். வாசனை, ருசி ஒன்றுமே இருக்காது.

அடுத்தபடியாக உங்கள் பாத்திரங்கள் ஏதோ வெறும் பொம்மைகள் மாதிரி இருக்கக்கூடாது. அவர்கள் பேச்சு, செயல், சிந்தனை எல்லாம் இயற்கையாக அமைந்திருக்கவேண்டும். வர்ணனைகள் தத்ரூபமாக இருக்கவேண்டும். அப்படி அமைய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

கற்பனைதான் எழுத்தின் ஜீவநாடி என்றாலும் எல்லாவற்றையும் கற்பனைப் பலத்தினாலேயே உருவாக்கிவிட முடியும் என்று தவறாக எண்ணிக்கொள்ள வேண்டாம்.

நீங்கள் பார்த்த இடம், நீங்கள் அறிந்த மனிதத் தன்மைகள், பேச்சுகள் இவற்றை ஆதாரமாகக் கொண்டு புனைவதே உங்கள் கதைக்குச் சிறப்பைத் தரும்.

நடை, சொல்லும் விதம், கதையின் கருப்பொருள், உத்தி, ஆவல், இயற்கையான உரையாடல், வர்ணனைகள், முடிப்பு இத்தனையும் சேர்ந்தால்தான் ஒரு நல்ல கதையை உருவாக்க முடியும்.

இவ்வளவுக்கும் மேலே கதைக்கான விஷயமும் நோக்கமும் சிறந்தவையாக இருக்க வேண்டும். படிக்கும் வயதில் படிக்காமல் இருக்கலாம் என்றும், திருடுவது குற்றமில்லை யென்றும். ஏமாற்றுவது குற்றவில்லை என்றும் உங்கள் கதைகள் போதிக்கலாமா?

வாழ்க்கையில் நம்முடைய லட்சியம் என்ன? நல்ல உயர்ந்த வாழ்வு வேண்டும் என்பதுதான். அதைத்தான் நமது கதைகளும் லட்சியமாகக் கொண்டு, உணர்த்துவதாக இருக்க வேண்டும்.

இதைப் பச்சையாகப் பிரசங்கம் போல் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்வதற்கு நாம் கதை, கவிதை என்று ஒன்றை எழுதுவானேன்? எல்லாம் மறைவாக, மனசில் மட்டும் வன்மையாக உறைக்கும்படியாக எழுதுவதுதான் கலையுணர்வு ஆகும்.

போட்டோ பிடித்து விட்டால் அது ஓவியமாகி விடுமா? ஆகாது. அதேபோல் நடந்ததை நடந்தபடி எழுதுவது, நடக்கக் கூடியதை. நடக்கக் கூடியபடி தத்ரூபமாக எழுதி விட்டால் மட்டும் போதாது. எப்படி நடந்தால் சிறந்ததோ அப்படி நடக்கும்படி எழுதுவதுதான் எழுத்துக் கலையின் சிறப்பு.

பிறருக்குச் சொல்ல ஒவ்வொருவனிடமும் நல்ல விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் சிறந்த எழுத்தாளனால்தான் எதையும் சிறப்பாக எடுத்துக்கூற முடியும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

சிறுதையூர் (திருச்சி ஜில்லா)
- உப தலைவர்: சி. சு. தேவராஜன்
- காரியதரிசி: ரெ. சீனிவாசன்
- பொருளாளர்: சி. பெ. பிச்சை

பத்துப் பேர்கள்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'பூமாலை' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. சதைகளை சி. சு. தேவராஜன், 64, குடியானத் தெரு, சிறுதையூர் என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

கோட்டாறு - கன்னியாகுமரி ஜில்லா
- உப தலைவர்: சு. ரா. சங்கரசுப்பையா
- செயலாளர்கள்: சு. குருநாதன், வி. எஸ். மணி
- பொருளாளர்: மா. கணேசன்

எட்டுப் பேர்கள்கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திரு வி. எஸ். ரமணியை ஆசிரியராகக் கொண்டு 'தாமரை' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் நடத்தப்படுகிறது. கதைகள் முதலியனவற்றை வி. எஸ். ரமணி, பெரிய தெரு, கோட்டாறு போஸ்டு என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

# பேனா நண்பர்கள்

1. D. ராஜேந்திரன், c/o T. K. தமோதர நாயுடு 478/B சோமவார்பேட், புனா-2.

2. L. R. S. வாசன், c/o L. S. ரங்கராஜன், ரேஞ்சு ஹில்ஸ், கர்க்கி, புனா-3.

3. G. T. ஜயராஜ், c/o P. S. ஜார்ஜ், 150, ராஸ்தாபேட், புனா-2.

4. P. N. S. மூர்த்தி, s/o P. K. நடேச முதலியார், சானிடரி இன்ஸ்பெக்டர், PER. 191-B, ரெயில்வே காலனி, ஐயனாவரம், சென்னை-23.

5. P. M. சோமசுந்தரம், 63. நரி முருகப்பமுதலித் தெரு, பிச்சனூர், குடியாத்தம், (வ. ஆ)

6. S. சாம்பமூர்த்தி, s/o சிவசுப்பிரமணியன், 10/3/443 கிழக்கு 3-வது தெரு, புதுக்கோட்டை.

7. A. பாலகுருமூர்த்தி, 24-A, முதல் தெரு, வரகனேரி, திருச்சிராப்பள்ளி ஜில்லா.

8. K. ரவிசந்தர், c/o A. அனந்தநாராயண ஐயர், C-37, தில்லை நகர், 3-வது கிராஸ் ரோடு, உறையூர், திருச்சி.

9. G. வரதராஜன், நான்காம் படிவம், போர்டு உயர்நிலைப் பள்ளி, பசுவந்தனை, திருநெல்வேலி ஜில்லா.

10. B. சாப்ஜான், 58-A. ராமநாபுரம் ரோடு, பாலெஸ் போஸ்டு, மதுரை.

11. K. V. சுவாமிநான், c/o வேங்கடசுப்ப ஐயர், 1/15 பவானி வீதி, பவானி.

12. K. ராக்கையா, சித்தா டிவிஷன், மத்துரட்டை, இலங்கை.

13. S. செல்வம், 212: என். சி. வீதி, திரிகோணமலை, இலங்கை.

14. P. விசுவரத்தினம், 217, கொழும்பு வீதி, கண்டி, இலங்கை.

(Regd. as Newspaper in Ceylon.) Reg. No: M. 5542


# கண்ணன் வெளியீடுகள்

**லீடர் மணி - 'ஆர்வி'** ரூ. 1.50

இளைய தாயாரின் கொடுமைகளுக்கிடையே கிராமத்தில் பள்ளிப் படிப்பை முடிக்கிறான் மணி. மேலே படிக்கப் பக்கத்து நகரத்திலுள்ள அத்தை வீட்டுக்குச் செல்கிறான். அங்கேயும் அவர்கள் கொடுமை தாங்காமல் நடு இரவில் வெளியேறிவிடுகிறான். வழியில் நண்பனாக வரும் கங்கன் ஆசை காட்டி அவனைச் சென்னைக்கு அழைத்துச் சென்று நடுத் தெருவில் விட்டுச் செல்கிறான். பலவித இன்னல்களையும் சமாளித்தவாறே விடாமுயற்சியுடன் நன்றாகப் படித்து வெற்றி பெறுகிறான். படிக்கத் தெவிட்டாத நடை. சுவையான கதைப் போக்கு. நடு நடுவே படங்கள். சிறுவர் ஒவ்வொருவரும் படித்து ரசிக்க வேண்டிய ரஸமான நாவல்.

**சந்திரகிரிக்கோட்டை - 'ஜனா'** ரூ. 1.25

அமலனும் விமலனும் இரட்டையாகப் பிறந்த ராஜகுமாரர்கள். அவர்கள் மாமன் - சந்திரகிரி நாட்டு மன்னன் - இறந்து போனதும் அந்த நாட்டையும் இளவரசியையும் பெற இருவரும் போட்டியிடுகிறார்கள். அரிய சாகஸங்கள் புரிகிறார்கள். கடைசிப் போட்டியில் இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க இளவரசியே மாறுவேடத்தில் வருகிறாள். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கதைப் போக்கு. அழகான படங்கள் நிறைந்தது.

**அசட்டுப் பிச்சு - 'ஆர்வி'** ரூ. 1.00

ஏ. பி. என்ற பையனை ஊரில் உள்ள மற்ற நண்பர்கள் அசட்டுப் பிச்சுவாக்கி விடுகிறார்கள். அவன் நடையும் உடையும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால் அவன் அதிருஷ்டமோ அளவிட முடியாமல் இருக்கிறது. பெரிய பெரிய திருட்டுக்களையெல்லாம் அநாயாசமாகக் கண்டு பிடித்துவிடுகிறான் அவன். பெயரும் புகழும் அவனைத் தேடி வருகின்றன. அடுக்கடுக்கான சம்பவங்களும் அழகான சம்பாஷணைகளும் நிறைந்த அருமையான கதை.

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு.

கலைமகள் காரியாலயம், சென்னை-4.